[illegible]

[illegible]

JL
[illegible]211, [illegible]
M123.14.4.
20793

413

Registered M. 878

16 JAN 1924

ஓம்

# ஞானோதயம்

பிரம்மஞ்ஞான மாதாந்தப் பத்திரிகை

பத்திராதிபர்கள்
அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.
சி. என். சுப்பிரமணிய ஐயர் பி. ஏ., அடையாறு.

தொகுதி 14]   1923ஹூ அக்டோபர்மீ 21உ   [பகுதி 4

பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1923ஹூ அக்டோபர்மீ 1உ | ... 97 |
| 2. | அன்னி வஸந்தையின் 77-ம்ஹூபாடிய வாழ்த்துப்பா. | 98 |
| 3. | கீர்த்தனம் | ... 100 |
| 4. | பெஸெண்டு அம்மையார் (கர்மயோகியான ராஜதந்திரி) | 101 |
| 5. | ,, ,, (பிரஹ்மஜ்ஞானி) | .. 105 |
| 6. | அனிபெஸண்டம்மையார் | ... 111 |
| 7. | லோகோபகாரியும் தீர்க்கதரிசியுமான பெ. அம்மையார் | 115 |
| 8. | ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம் 5-ம் வாரம் | ... 122 |
| 9. | ,, ,, 6-ம் வாரம் | ... 127 |
| 10. | ,, ,, 7-ம் வாரம் | ... 130 |
| 11. | ,, ,, 8-ம் வாரம் | ... 133 |
| 12. | நமது கிருகங்கள்—தெருக்கள்—நகர்கள் | ... 138 |
| 13. | தைவாசுரசம்பத்து | ... 141 |
| 14. | பத்திராதிபர் குறிப்புக்கள் | ... 142 |

அடையாறு பிரம்மஞ்ஞானத் தமிழ்ப் பிரசுரச்
சங்கத்தாரால் வெளியிடப்பட்டது

வருஷச் சந்தா 2-0-0.]   [தனிப்பிரதி 4 அணா

# அடையாறு பிரஹ்மஞானத் தமிழ்ப்பிரசுரச் சங்கம்.

---

மேற்படி பெயரால் ஒரு சங்கம் சென்ற வருஷம் எப்பிரல் மீ ஏற்பாடாகி 1860-ஆம் வருஷத்திய 21 ஆவது ஆக்டின்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

பிரஹ்மஞானசபையில் ஆங்கிலேய பாஷையில் பிரசுரம் செய்திருக்கப்பட்ட கிரந்தங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடவேண்டும் என்ற முக்கிய நோக்கங்கொண்டே அது ஸ்தாபிக்கப் பெற்றது. பிரஹ்மஞானசபை அங்கத்தினர்களே இதில் மெம்பர்களாகலாம். பத்து ரூபாய் ஒரே மொத்தமாகவோ அல்லது தவணையிலோ கொடுப்பவர்கள் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். அப்படியே நூறு ரூபாய் கொடுப்பவர்கள் காரிய நிர்வாகசபையிலும் அங்கத்தினராகலாம்.

நமது கிரந்தங்களை அச்சிடுவதில் ஏற்கெனவே சிரமம் தோன்றுகிறபடியால் நமக்குச் சொந்த அச்சியந்திரசாலை கூடிய சீக்கிரம் ஏற்படுத்த வேண்டும். இதற்கு ரூபா 3,000 நமக்குத் தேவை. இப்போது பிரஹ்மஞானபிரசாரக வேலைக்காக பத்து ரூபாய் கொடுக்கக்கூடியவர்கள் 300 மெம்பர்களாவது நமது தமிழ் நாட்டில் இல்லையா? காரிய நிர்வாக சபையிற்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இச்சபையால் பிரசுரமான கிரந்தங்களில் ஒரு பிரதி இனாமாகவும் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் புத்தகம் அரைவிலைக்கும் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறது. இதன் விவரமறிய விரும்புவோர் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம்.

ஸர். தி. ஸதாசிவ ஐயர்<br>அக்ராஸனர்.

யம். எஸ். கணேச ஐயர்<br>வக்கில், சிவகங்கை.

ஸி. என். சுப்பிரமணிய ஐயர், பி. ஏ.<br>பத்த விலாசம், அடையாறு.

காரியதரிசிகள்.



ANNIE BESANT, D.L.

210793.

# ஞானோதயம்

பிரம்மஞ்ஞான மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 14] 1923வரு அக்டோபர்மீ 21உ [பகுதி 4

ஓம்.

## 1923வரு அக்டோபர்மீ 1உ

கடவுளை மனிதர் பற்பலதுறைகளில் தேடியும், வழிதவிர்ந்தமையால் கண்டனரில்லை. வனத்திலும், குகையிலும், பொதியிலும் தேடினரவரை; தவவிரதத்திலும், துறவறத்தினிலும், தத்துவவிசார விவகாரத்திலும் தேடினரவரை. அவரோ எதிலும் அகப்படவில்லை. ஆகையாலே ஒரே ஒரு இடத்தில் நிச்சயம் அவரை மறுபடி விடாது சிக்கெனப் பிடிக்கலாம். அது சித்தமும் மனமும் கடந்த ஓா இடமாம். அவன் இதயகுகையில் ஆத்மாவினுள்ளே ஆழ்ந்தமர்ந்திருப்பவன். மறைய நின்றுளன். இருள்கடிச் சோதியான். நித்தியன். ஸத்துவன். அன்பினன். அழகினன். அங்கவன் தரிசனம் காண்பீராகில், எங்கும் அவனைக் காண்பவராவீர். தன்னுயிர் போலப்பிறரெவரிடத்திலும், மிருகம், செடிகொடி, தாதுப் பொருளிலும், அகிலமும் சூழ்ந்த நீலவிண்ணொளியிலும், இன்பத்தினிலும், துன்பத்தினிலும், சௌக்கியத்தினிலும், துக்கத்

தினிலும், மானமே தெரியாத் தீமையிருளில் கிடந்து தவித்து உழலுவோருள்ளும் அவனையே கண்டுகளிப்பவராவீர். அவனை எவ்வுயிரிலும் கண்டு வணங்குமின். பசித்தவர்க்குணவும், அறிவிலர்க்கறிவும், அன்பிலர்க் கன்புமாய்க் குறையெதுந் தீர்த்து, வாழ்க்கையே கோயிலாய்க் கருமமே பலியாய்க் கருத்திற் கொண்டு நடப்பீராகில், பூமியிற் கடவுளின் உயர்படைப்பான குமரதநுவாம் அரசனை அழகுறக் கண்டுகளித்தொரு நாள் அவன் கிருபையால் திவ்விய மனிதத் தன்மையாகிய பூரண மனிதத் தன்மையடைவீர்.

**அன்னை வஸந்தை.**

---

ஓம்.

# ஸ்ரீமதி டாக்டர்
# அன்னை வஸந்தையின்
## எழுபத்தேழாம் வருஷப் பிறப்புக் கொண்டாட்டத்தில் பாடிய வாழ்த்துப்பா. *

---

சீர்மலி யுலகத் திலகமே யாய
பாரத தேசப் புதல்வீர்! கேண்மின்.
தூயவெண் டருமமே யுருவெனத் தோன்றிய
**அன்னை வஸந்தை உலகினுக் கருங்கலம்.**
**வாழி பல்லாண்டுகள் வாழியே யவள்**
உலகத் துன்பம் ஒழிக்க வுதித்தனள்,
நாத்திகம் நலிய வாத்திகம் பொலியத்
**தோன்றினள் சென்றநூற் றாண்டு தனிலே**
**நாற்பத் தேழா நவில் வருஷத்தில்.**
வெண்கலை யுடுத்த வாணியோ! ஔவையோ!
பாரத தேசத் தாயே இவளோ!

* இது கோக்கலே ஹாலில் ராமசுப்பையர் பாடியது.



எனவே பலரும் ஏற்றிப் போற்றிடக்
கால்வைத் தனளே தூற்றுக் குடியினில்
தொண்ணூற்று மூன்றாம் வருஷந்தனிலே.
அந்த நாள் தொட்டு இந்த நாள் வரையில்
தேச மெங்கும் திரிந்து பல்வகைத்
தேச வூழியத்தில் தேய்ந்து தேர்ந்தனள்.
கடன் மடை திறந்த கருணைப் பெருக்கெனும்
பிரசங்க மாரிகள் பெய்யக் கேட்டு
எத்துணை கன்மனம் இளகின புளகெழ!
சுதந்திரத் திற்கே சொற்போர் புரிந்து
வெற்றித் தழும்புகள் விளங்கப் பெற்றனள்.
உலக முழுதும் பரவிய பிரம
ஞான சபைக்கொரு நவமணி விளக்காய்
உலக முழுதையும் ஒளிசெய் பவளாய்
உலக நாயகனுங் குமரக் கடவுளின்
அடியளாய் நின்றே யவர்குறிப் புணர்ந்து
பாரத பரிஜனர் சுயஆட் சிக்கும்
பிரிடிஷ் ராச்சியப் பெருங் காப்புக்கும்
கீழ் நாட்டினிலும் மேல் நாட்டினிலும்
ஆரியக் கிளைகள் அந்நியோந்நியமுறச்
சொல்லொணா வன்மையோ டொருங்கே யுழைக்கிறாள்.
சற்றுஞ் சலிப்பைத் தானொணா மனத்தினள்,
தருமயுத் தத்தில் தளரா நெஞ்சினள்,
மெலியோர்க் கிரங்கும் விழுமிய ளாதலின்
மெலிந்த நந்நாடு மிகச்சீர் பெறவே
எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்தும்
அந்த நாட் கண்ணன் கீதையாய்த் திரட்டி
அருச்சுனற் கூட்டிய வரும்பொரு ளறத்தைக்
கருத்திற் கொண்டு கடலென முழக்கவர்
உயர்சொற் கேண்மின், ஒற்றுமை காண்மின்.
வந்தே மாதரம் வந்தே மாதரம்.

**பாரதபுத்திரன்.**

# கீர்த்தனம்.

---

ராகம்—மூகாரி—ஆதிதாளம்.

பல்லவி

மாதக்கரசி நம் ஆனிபீஸன்றாகும்
மாதே நீயது கேளாயே—செல்
லாதே நீயது கேளாயே

அனுபல்லவி

வாதுக்கும் சூதுக்கும் வம்புத்தனத்துக்கும்
எதுக்குப்போகிறாய் இன்பமன்றோ கல்வி
—மாதுக்கரசி

சரணங்கள்

(1) ஈசன் றுணையைப்பிறுகப்பிடித்து நம் தேசங்கரையேறவே
—இந்த
பீஸன்றம்மாள் செய் பெரிய முயற்சியாம்
பேர்கொள் தியாஸவியென்றும் பெருகிடும்
—மாதுக்கரசி.

(2) கல்விக்களஞ்சியம் கற்றதை மற்றவர் கற்கப்பயிற்றுபவள்
—உயர்
செல்வத்துரை மகள் சிறிய ஞானி நம்
ஜீவகாருண்யத்துக்காவி யெனப்படும்
—மாதுக்கரசி

(3) தேசமெல்லாஞ்சென்று திவ்யப்ரஸங்கங்கள் செய்து
திகழ்புகழாள்— அவள்
வாசகம் ஆற்றுப்பெருக்காயொழுகி நன்
மதியை விளக்கும் கதியைக்கொடுக்குமே
—மாதுக்கரசி

(4) முத்தும் பவளமுஞ்சேர்வடமோ வண்டுமொய்க்கின்ற
பூஞ்சரமோ—மிகத்
தித்திக்குந்தேனோ திருந்திய ஞானம்
செழிக்கின்ற தீஞ்சொல்செறியும்ப்ரஸங்கமே
—மாதுக்கரசி



(5) எல்லா உயிர்களும் தீதின்றிவாழ இரக்கமுள்ளாள்
அவளே—பெருஞ்
சொல்லாகும் மந்திரத்தால் கட்டி யாரையும்
தூயநெறிகாணுந் தாய்போன்ற நம்குரு
—மாதுக்கரசி

(6) ஒய்யார வார்த்தை யொழுகவிட்டவ்விதம் செய்யாது
போதல் நன்றோ—நாம்
மெய்யாக நம்பினதைக் கையோடே செய்திடும்
மேலாளை வந்தித்துச் சால உயருவோம்
—மாதுக்கரசி

(7) ஆடு முதலிய ஏழை உயிர்களை அறுக்கும் பலிகெடவும்
—இந்த
நாடு பெருங்கதி நாடவுமாய் அவள்
நீடூழிவாழ நாம் நேடுவோமீசனை
—மாதுக்கரசி

டி. லக்ஷ்மணபிள்ளை, பி. ஏ.
திருவனந்தபுரம்.

---

## டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் (கர்மயோகியான ராஜதந்திரி)

---

அன்னிபெஸண்டு அம்மையாரின் சக்திகளும் அவைகளை ஆதாரமாய்க் கொண்ட பிரவிர்த்திகளும் பலவாறாய் விளங்குகின்றன. அவர் உலகத்தில் கியாதி யடைந்த உபந்யாஸகர்களுள் தனி முதன்மை பெற்ற ஒருவர். பற்பல விஷயங்களை விளக்கும் உயர்ந்த நூல்களை இயற்றிய பெயர் பெற்ற கிரந்த கர்த்தரும் ஆவர். மனிதர்களுடைய சிரத்தையையும் பக்தியையும் விகஸிக்கச் செய்து அவர்கள் தன்னிடம் வைக்கும் அன்பின் வழியாய் அவர்களுக்கு ஐக்கிய உணர்ச்சியையும் ஆற்றலையும் தந்து அவர்களைக் கொண்டு பரோபகாரத்தைத் தழுவிய ஸாகஸச் செயல்களைச் செய்து முடித்தலும் அன்னிபெஸண்டு அம்மையாரின் குணாதிசயமாம். காசி மத்திய இந்து காலேஜ் பிரஹ்மஞான சபை முதலியன சம்பந்தமாய் ஏற்பட்ட நிர்வாகங்கள் இதற்கு உதாரணமாகும். மேலும்

குப்த வித்யாப்பியாஸத்திலும் ராஜயோக மார்க்கத்திலும் தன்னைப் பின்பற்றினோர்க்கு இன்றியமையாத உதவி புரிந்து அவர்களுக்கு மெய்யறிவைக் கொடுத்து ஞான நெறியில் வழி காட்டுவோரும் ஆவார்.

இவ்வியாஸத்தில் நாம் எடுத்துரைப்பது மேற்சொல்லிய காரியாதிகளில் அவருடைய செயல்களைப்பற்றி அல்ல. அவர் கர்மயோகத்தை அவலம்பித்து ராஜகீய விஷயங்களில் ஸாதித்திருக்கும் அருமையான செயல்களைப் பற்றியும் அச்செயல்களுக்குக் காரணமாயிருக்கும் அவரது அந்தரங்க மனோபாவத்தைப்பற்றியும் இங்கு உரைப்பாம்.

ஐந்தாவது மூல ஜாதியின் முதல் உபஜாதிக்கு இருப்பிடமான இவ்விந்தியா ஒரு நூதன ராஜகீய நிலையை அடைந்து வருகின்றது. அது இதுவரை கைக்கொண்ட நிலையைக் காட்டிலும் வேறெனலாம். பல நூற்றாண்டுகளாய் சுதந்திர மற்று பராதீனப்பட்டு உலகத்திய நானா தேசங்களுள் தாழ்ந்த ஸ்திதியை அடைந்த நம் தேசம் முன் உயர் நிலையில் உலக திலகமாய்ப் பிரகாசித்த பொழுது, நந்தேச வாசிகள் அனைவரும் ஸநாதன தர்மத்தையும் அதன் சார்பான பௌத்த, ஜைந தர்மங்களையும், அவற்றோடு பொருந்திய பொது நாகரிகத்தையும் அதன் உள் வேறுபாட்டுக்களையும் கைக்கொண்டு வந்தார்கள். இக்காலத்திலோ இந்த ஆரியாவர்த்தத்தில் அதின் பிராசீன மதக் கொள்கைகளுக்கு வெளித் தோற்றத்தில் முற்றிலும் வேறாகக் காணும் இஸ்லாம் மதமும், கிறிஸ்து மதமும் பரவி நிற்கின்றன. இக்காலத்தில், பூர்வ பச்சிம திசைகளுக்குரிய எதிர் நிலையில் முறையே சுவேத வர்ணத்தார்க்குள்ளும் கபில வர்ணத்தார்க்குள்ளும் வழங்கி வரும் இருவித நாகரிகங்களும் இத்தேசத்தில் முரண்படுவது போல் தோன்றிலும், உராய்ந்து ஒன்றாகி ஸமரஸ நிலையை அடைய வேண்டியே யிருக்கின்றன. இந்தியாவானது மற்ற தேசங்களினின்று தனித்து நிற்கும் இயல்பை விட்டு, தேச வுறவுக்கு ஸாதனங்களாகிய புகை வண்டி, புகைக் கப்பல், ஆகாய வாகனம், தந்தி, தபால், ஆங்கில ஸாம்ராஜ்யத்தின் ஓர் பிரிவாய் இருத்தல், உலகத்தின் பொதுப் பாஷைகளில் பிரதானமான ஆங்கில பாஷையில் அறிவுடன் கூடி யிருத்தல் முதலியவைகளைக் கைப்பற்றினதாய், கால இயற்கைக்குத் தக்கவாறு சுதந்திரம் பெறின், அச் சுதந்திரம் பூர்வகாலத்திய சுதந்திர பதவியைக் காட்டிலும் வேறானதல்லவா? மேற்சொல்லிய விதமாய் பல வழிகளில் முன்னைவிட முற்றிலும் வேறுபாடுள்ள. இத்தேசத்தின் நூதன ராஜகீய அமைப்பானது உலகிலுள்ள மற்ற தேசத்தாருக் கொப்பந்தம் நமக்குப் பூரண உரிமைகளைக் கொடுக்கத்தக்கதாயிருப்பினும் இதுவரை இத்தேசத்தில் அமையாத நூதன உருவத்தைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும். அது இந்து பௌத்த, கிறிஸ்தவ, முகம்மதிய முதலிய பல சமயங்கட்கும் நடுநிலைமையான சகோதரத் தன்மையைத் தழுவி நிற்க வேண்டும். கீழ்த்திசை மேற்றிசை நாகரிகங்களின் சாசுவத லக்ஷணங்களுக்கு உடன்பட்டு நிற்றல் வேண்டும். பல்லாயிர வருஷங்களாய் நடைபெற்று வந்த ஸநாதன மதஸ்தர்களின் ஆசாரங்களும் வழக்கங்களும் இந் நூதன நிர்மாணத்திற்குத் தக்கவாறு மாற்றப்பட வேண்டும்.



மற்ற தேசங்களில் இவ்வித ஸமூலமான மாறுதல்கள் கலகங்களாலும் ரணகள சம்பவங்களாலுமே நிகழ்ந்து வந்திருக்கின்றன. அதற்கு பிரஞ்சுக்காரர், அமெரிக்கர், ருஷியர் முதலிய ஜாதியோரின் கலாபங்களே சான்றாகும். ஆனால் நமது தேசத்திலோ அத்தேசங்களில் நேர்ந்த மாறுதல்களைக் காட்டிலும் மகத்தாயுள்ள மாறுதல்கள் நம் அத்யாத்ம பாவத்திற்கு உரியதான ஸநாதன வழிகளில் ஏற்பட வேண்டும்.

மேற்சொல்லிய முறைகளால் ஒரு நூதன நிர்மாணத்தை நமது தேசத்தில் உண்டுபண்ணுவதில் தலைமை பூண்டவர்கள் அவதார புருஷர்கள் ஆவார். அவதார புருஷர்கள் என்ற வாசகத்தால் குறிக்கப்படுவது ஈசுவர அவதாரங்கள் மட்டும் என்பதல்ல. ஒரு அர்த்தத்தில் எல்லா ஜீவர்களும் ஈசுவராம்சம் பெற்று ஜன்மங்கள் தோறும் இப் புவியில் அவதரிக்கின்றனர். பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரங்களாலும் கர்ம விசேஷங்களாலும் ஆத்ம சக்திகளாலும் ஓர் மிக அரிய காரியத்தைச் செய்து முடிக்க ஏற்படுபவரும் அவதார புருஷர் ஆவார். அன்னி பெஸண்டு அம்மையார் அத்தன்மையர்.

ராஜகீய விஷயங்களில் சுமார் ஐம்பது வருஷங்களாய் ஏற்பட்ட அனுபவத் தேர்ச்சியுடன் இத்தேசத்திய நூதன ராஜகீய நிர்மாணத்தில் உழைத்து வருகின்றனர். இத்தேசத்தில் இதற்கு முன் மதம், கல்வி, ஆசார சீர்திருத்தம் முதலியவைகளில் உழைத்து பொதுஜன விவேகத்தை அபிவிருத்தி செய்தனர். இப்பொழுது சில வருஷங்களாக ராஜகீய பிரவிர்த்தியில் புகுந்திருக்கின்றனர். முற்றிலும் லௌகிகப்

போராட்டமாகிய ராஜகீய நிர்மாணத்திற்கு அதற்குரிய உறுதியான மூலக் கொள்கைகள் அடிப்படையாக இருத்தல் வேண்டும். புயற்காற்றில் கொந்தளிக்கும் சமுத்திர மத்தியிலுள்ள அசையாப் பாறை போல் அக்கொள்கைகளைக் கடைப்பிடித்து நிற்றல் வேண்டும். ஏற்படுத்திய பிளானையும் அதின் விவரணங்களையும் அறியாமல் சுற்றி நிற்கும் ஜன ஸமூகத்தார் நன்கு மதித்தாலும் அவமதித்தாலும், ஆமோதித்தாலும் மறுத்தாலும், அன்பு பாராட்டினாலும், துவேஷித்தாலும் 1913-ம் வருஷத்தில் அன்னிபெஸண்டு அம்மையார் தாம் இத்தேசத்தின் பொருட்டு ஏற்றுக் கொண்ட ராஜகீய கைங்கரியத்தை இடைவிடாது அவரது உயர்வான பூரணசக்திகளையும் அர்ப்பணம் செய்து நிறைவேற்றி வருகின்றனர். அம் மூலக் கொள்கைகளாவன :—(1) இந்தியா தேசம் பூரண ராஜகீய உரிமைகளுடன் சுயஆட்சி பெறவேண்டும். (2) வரப்போகும் உலக ஸாம்ராஜ்யத்திற்கு ஆரம்ப காரணம் போல் அமைந்துள்ள பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தை விட்டு இந்தியாவானது அகலாது அந்த ஸாம்ராஜ்யத்தின் மற்ற அங்கங்களான தேசங்களுடன் சமநிலைபெற்று விளங்க வேண்டும். (3) இம்மாறுதல்கள் பலாத்கார வழிகளால் அல்லாது சமாதான முறைகளால் ஏற்பட வேண்டும்.

1913-ஆம் ௵ முதல் 1923-ஆம் ௵ வரை இவரது தலைமையின் கீழ் நிகழ்ந்த சம்பவங்களிலெல்லாம் இக்கொள்கைகளைச் சஞ்சலமின்றிக் கைப்பற்றியே வந்திருக்கின்றனர். "காமன்வீல்" "நியூ இந்தியா" பத்திரிகைகளை ஸ்தாபித்து இந்தியர்களுக்கு வீரியத்துடன் பொருந்திய ஓர் புதிய ராஜகீய உணர்வைப் புகட்டி வந்தனர். மித, அமிதவாதிகளை ஒன்றுபடுத்தினர். "ஹோம் ரூல்" என்ற சுயஆட்சி நமது முடிவென, 1916-ஆம் வருஷத்தில் கொடி நாட்டினர். அவ்வருஷக் கடைசியில் இந்து முகம்மதிய ஐக்கியத்தை நிறைவேற்றினர். 1917-ஆம் வருஷத்தில் தாம் சிறைப்புகுங்கால் தாம் இறக்கு முன்னர் இந்தியாவிற்கு 'ஹோம்ரூல்' சித்திப்பதை நிச்சயமாய் காண்பேனென உறுதி கூறினர். 1919-ஆம் வருஷத்தில் ஸ்வராஜ்ய வழிக்குக் கொண்டு போகும் இராஜகீய சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதில் உழைத்தனர். 1920-ஆம் வருஷம் முதல் 1922-ஆம் வருஷம் வரை ராஜகீய அநுபவமின்மையால் மேற்சொல்லிய மூலக் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமாய் நிற்கும் 'ஒத்துழையாமை' என்ற இயக்கத்தில் நமது ஜனங்கள் வழிபட்டுச்



சிதறுண்டு லக்ஷியத்தை கைவிடா வண்ணம் கூடஸ்தர் போன்ற நிலையில் நின்றுகொண்டு தனிமையாய்ப் போர் புரிந்து அவ்வியக்கத்தை க்ஷீணிக்கச் செய்து வென்றனர். ஸ்பெஷல் காங்கிரஸில் சட்டசபை பிரவேசம் ஆக்ஷேபிக்கப்படாமல் நின்றதற்கு இவரது செயலே ஒரு முக்கிய காரணமாகும். இத்தேசத்தில் பல ராஜகீய கக்ஷியார்களும் மறுபடியும் ஒன்றுசேர யத்தனப்படுகின்றனர். மறுபடியும் முடிவான லக்ஷியமான ஸ்வராஜ்யத்தை நிலைநாட்டும் சட்டம் பார்லிமெண்டாரால் சமீபகாலத்தில் ஆமோதிக்கப்பட வேண்டி இவ் வருஷத்தில் ஒரு நாஷனல் கன்பிரென்ஸை ஸ்தாபித்து அதின் வழியாய் 1924-ஆம் வருஷத்தில் ஒரு நாஷனல் கன்வென்ஷனைக் கூட்டுவிக்க பிரயத்தனம் செய்து வருகின்றனர். அதின் மூலமாய் பூரண சுயஆட்சியும் சித்திக்கும். இந்தியாவின் முன்னேற்றமும் உலகின் முன்னேற்றத்திற்குக் காரணமாகும். மணிகள் கோக்கப்படும் தந்துவானது அம்மணிகளை ஒன்று சேர்ப்பது போல இவருடைய பற்பல மகத்தான இந்திய ராஜகீய காரியங்கள் அனைவற்றுக்கும் ஐக்கிய பாவத்தை தருவது இவர் கொண்டிருக்கும் ராஜகீய பிளானும் அதைக் கொண்டு செலுத்தச் சங்கற்பித்து நிற்கும் இவரது உறுதியான மனோபலமுமேயாம். அதைத் தெரியாதவர் இவர் மாறிமாறி நிற்கின்றார் என்று அவதூறு கூறி தம் தம் அறிவின்மையையே வெளிப்படுத்திக் கொண்டு நிற்கின்றனர். இவர் கைக்கொண்ட காரியம் குப்த வித்தையை அப்பியஸித்து நிற்கும் ஒரு கர்மயோகியாகிய ராஜதந்திரியால் ஸாதிக்கக் கூடியதே யல்லாது சமயம் போல் ஒழுகி நிலையற்று நிற்கும் சாதாரண ராஜ தந்திரிகளால் நிறைவேறக் கூடியது அல்ல. அப்பேர்ப்பட்டவருடைய பிறப்புத் திருநாள் இம் மாதம் முதல் தேதியில் கொண்டாடப்பட்டது.

ஏ. ரெங்கஸ்வாமி அய்யர்.

---

## டாக்டா அன்னிபெஸண்டம்மையார் (பிரஹ்மஜ்ஞானி)

நமது ஞானோதய பத்திராதியர் விருப்பத்திற் கேற்க மாதுஸ்ரீ டாக்டர் அன்னிபெசண்டு அம்மையவர்களின் சரித்

திரத்தின் இவ்வொரு பாகத்தை எழுதத்துணிந்தேன். அதாவது, அம்மையார் பிரம்மஞான சங்கத்தில் அங்கத்தினரான பின் பொதுவாக உலக நன்மையையும் சிறப்பாக நம் ஜனன பூமியின் முன்னேற்றத்தையுங்கருதிச் செய்துள்ள காரியங்களேயாம்.

நம்தலைவி 1889ஆம் ஆண்டில் இச்சங்கத்தைச் சேரவிரும்பி, இதன் ஸ்தாபகரான பிளவாட்ஸ்கி அம்மையை யடைந்தார். அவரிடம் உபதேசம் பெற்று யோகவழியில் நின்றார். அக்காலத்தில், அதாவது இற்றைக்கு 34 ஆண்டுகளுக்கு முன்னர், மேல் நாட்டு நாகரிகத்தின் தன்மையும், அந்நாகரிகத்தின் வாயிலாய் கற்றறிந்த பூதபௌதிக சாஸ்திரங்களின் பலனாக நம்மில் அநேகரிருந்தநிலைமையும், கேவலநாஸ்திகமே என்பது பிரசித்தம். அக்காலத்திற்கும் இக்காலத்திற்குமுள்ள தாரதம்யத்தை ஆராய்ந்தறிந்தவர்களுக்குத் தான் அம்மையவர்களின் பெருமையும், விடாமுயற்சியுடன் சென்ற 30 வருஷங்களாக நம்தேசத்திற்குப்பாடுபட்டுவரும் அவர்களுடைய மேன்மையும் விளங்குமேயல்லாமல், சொற்ப வருஷங்களாக இச்சங்கத்தின் சரிதையையறிந்தவர்களுக்குப் புலப்படமாட்டா.

1893ஆம் ஆண்டில் நமது தலைவி முதல் முதல் இத்தேசத்திற்கு விஜயம் செய்தார்கள். அக்காலத்திற்கு முன்னரே இந்து தேச ராஜகீய விஷயமாகப் பிரஸங்கித்தும் பத்திரிகைகளில் எழுதியுமுள்ளார். இதனால் அவர்களுக்கு நெடுநாளாக இத்தேசத்திலபிமானமிருந்ததாகத் தெரிகிறது. அதுவும் ஜன்மாந்தர வாசனையினாலியங்கியதுபோலும். இன்றேல், அம்மையவர்கள் இப்பூமியிலடிவைத்தவுடன், ஸநாதன தர்மம் எனும் இந்து மதத்தைப்பற்றி அதில் பிறந்து வளர்ந்து நெடுநாள் அதைக் கையாண்டவர்களைப் போல் உபந்நியசிப்பதும், புஸ்தகங்கள் எழுதுவது மசாத்தியம். இது விரிக்கில் பெருகும். உதாரணமாக - 1893ஆம் ஆண்டு முடிவில் நம் தலைவியின் இக்கால வாஸஸ்தானமாகிய அடையாற்றில் நமது பிரமாண்ட உற்பத்தியைப்பற்றி அவர்கள் செய்திருக்கும் உபந்நியாசமே இதற்கு சாக்ஷி. மேலும் அதிலடங்கியிருக்கும் விஷயங்களை ஆராய்ந்தால், நாஸ்திகவாதத்தில் ஊன்றி நின்ற இவ்வம்மையாருக்கு அவைகளெப்படிப் புலப்பட்டன வென்று ஆச்சரியமுண்டாகும். இவ்வழியே அம்மையவர்கள் அன்று தொட்டு இன்றுவரை செய்துள்ள பிரசங்கங்களும், எழுதியுள்ள வியாசங்களும், அத்தாக்ஷிகளாகும். அவர்கள் உபந்நியாசங்களெல்லாம் புஸ்தக ரூபமாய்க்கிடைத்திருப்பதாலநேகர் அவைகளைப்படித்திருக்கலாம். சுருங்கச் சொல்லில் அவைகளைப் படித்து மனனஞ் செய்தவர்களது கருத்து அவர் முன் இந்நாட்டிற் பிறந்த அநேக ஜன்மவாஸனைகள் பெருகி முதிர்ந்து இப்போது இந்து மதத்தின் ஆழ்ந்த தத்துவங்களை நினைத்ததும் அறியும் சக்தி இயற்கையிலேயே அமையப் பெற்றிருக்கின்றனர் என்பதாம். இந்து மதமன்றி மற்று எம்மதமும் நமக்குச் சம்மதமே யென்றும் போதித்துள்ளார். அநேக தேசத்தவர்கள் கைப்பற்றிவரும் மதங்கள்யாவும் ஸர்வேசுவரனுடைய அமைப்பிற்குள்ளடங்கியிருப்பது பற்றி, எதைத்தள்ளுவது எதையங்கீகரிப்பது, எதையுயர்த்துவது எதைத்தாழ்த்துவதென்ற உத்தம சமரச நிலையினின்று விளங்குகிறார் போலும். மேலும் கடவுளின் சிருஷ்டிப் பொருள் யாவையும் ஸர்வஜனங்களும் ஸ்வீகரிக்கிறார்கள். நிராகரிப்பார்யாவருமிங்கில்லை. அவ்விதமிருக்க அவர் முற்காலங்களில் அருளியதும், இனியருளக்கூடியதுமான மதங்களில் எவைகளை உண்மையற்றவைகளென்று எண்ணுதல் தகும்? அப்படி எண்ணுதல் விபரீதஞானத்தினியல்பதாகும். நம்தேசத்தில் விளங்கிய தத்வதரிசிகளும் இதரதேசங்களிலிருந்த மஹான்களும் ஒரு மதத்தையாகிலும் ஒரு ஜனஸமூஹத்தையாகிலும் இகழ்ந்ததாகத் தெரிகிலேம். சரித்திரமும் அவ்விதமாக எழுதப்படவில்லை. ஆழ்ந்த அறிவினர்கள் சர்வமதங்களுக்கும் மூலம் ஒன்றே என்றுசாதித்திருக்கின்றனர். "குலவாநின்ற வாறனைத்தும் புகும் கடல் போற் சமய கோடியத்தனையும் தொடர்ந்துபுகும் ஆதி நட்பே" என்றார் மஹான் தாயுமானவர். அனந்தபத உயிர்களொடும் தோய்ந்தும் தோயாதும் நிற்கும் ஈசனை "நட்பே" யென்று அழைத்தார். அந்நட்பினால் ஏற்பட்டவைகள் இவ்விந்நியாசங்களல்லவா? அவைகளின் உட்கருத்தையறியாது அவமதிப்பது மதிமயக்கமன்றோ? இந்த தத்துவத்தையறிந்த பெரியார் எதையும் தூஷித்துப் பேசாரென்னும் விஷயத்தை நம்மவர்களுக்கு நம் தலைவி அடிக்கடி எடுத்து உரைத்திருக்கிறார். அதினின்றே அவருடைய உயர் நிலை இவ்வெளியோன் சொல்லாமலே, இனிது தெளிவாகின்றது. இது நிற்க.



பிரம்ம வித்தை என்று ஒன்றுளதோ? எப்படி அதைப்பழகுவது? அதை உபதேசிக்கும் ஞானிகளுளரோ? அவர்களிருப்பது உண்மையாகில் பார்த்தவர்கள் உண்டோ? என்று இவ்வித சங்கைகள் ஏற்பட்டு நம்மவர்களிலனேகர் மயங்கியிருக்குங்கால் இவைகளென்றைக்கும் நிலைபெற்றுள்ளன, பிரம்ம வித்தையை

அப்பியசித்துத் தேர்ந்த ஜீவன் முக்தர் இருப்பது வாஸ்தவமே, அவர்களிடம் உபதேசம் பெற்றுச் சொல்லற்கரிய பதவியிலிருக்கும் அவர்களை அறிந்தேன் - என்று பஹிரங்கமாகச் சொல்லும் தன்மையை எவரிடம் காணலாம்? இவைபோன்ற குப்த விஷயங்களையெல்லாம் அம்மையார் எடுத்துவிவகரித்துள்ளார். அம்மஹரிஷிகளையடையும் மார்க்கத்தையும் காட்டியுள்ளார். அவ்வழியிற் செல்லாமல் பிரவர்த்திமார்க்கத்தில் காலங்கழித்து தம் சுய நலமே பாராட்டி அதிலே கருத்தைச் செலுத்தியிருக்கும் எம்போன்ற எளியோரதை அறிவது எளிதன்று. இவ்வண்ணம் வெளிவந்து தெரிவித்து நமக்கு சிரத்தையை உண்டுபண்ணுகிற பெரியார் இல்லாத் தன்மையாலன்றோ, பிரம்மஞானம் குன்றி தேசம் மலினமடைந்தது.

மேலும், இக்காலத்தில் தாம் சொல்கிறபடி அநுஷ்டித்துக் காட்டுகிறவர்கள் சிலரே. பெரும்பாலார் மேலான உண்மைகளை அநுபவத்திற்கு கொண்டுவரக்கனவிலும் நினைப்பதில்லை. அநுபவமுடைய சிலர் மௌனம் சாதித்து விட்டார்கள். பாமரர் உய்வது தான் எவ்விதம்? அந்தகாரத்தால் மூடப்பட்டு திசை தெரியாமல் மயங்கும் எம்போலியர்க்கு உதயதிசை சூரியன் போல் விளங்கி, தாம் அநுஷ்டித்தறிந்த அநுபவங்களை வெளியிட்டு, ஸன்மார்க்கமிதுதானென்றுஉபதேசித்தவரிவரே.

நிவர்த்தி மார்க்கத்தையடைந்தவர்களில் சிலர், தங்கள் ஒழிவைக்கருதி முக்தியை அடையத் தபசுசெய்கிறார்கள். ஈசனால் அமைக்கப்பட்டது அதன்று. ஒருவித சாதனத்தால் நாம் பெற்றுள்ளதைப் பெறாதவர்களுக்கீந்து, உலக ஸம்ரக்ஷணத்தை நாடுவது கர்த்தனின் கட்டளையேயன்றி, நாம் தனிமையில் சுகத்தை அநுபவிப்பதன்று. இவ்வித அபிப்பிராயம் தவறென்றால், திரிமூர்த்திகளின் தொழில்கள் எதற்கு? "லோகசங்கிரஹம்" என்ற பதத்தின் உட்கருத்தையறிய வேண்டும். வேறு வழியிற்சென்றால் நீடூழியான ஆனந்தம் லபிக்கமாட்டாது என்று நமது மாதஸ்ரீ அம்மையார் செப்பியும், சரிதையில் காட்டியுமுள்ளார்.

மதச்சீர்திருத்தத்தின் பொருட்டு அவர்கள் செய்திருக்கும் முயற்சிமிகவாம். சாலக்கிரமத்தால் மூலதத்துவங்கள் மங்கி, சிற்சில அவாந்தரக் கோட்பாடுகள் தலையெடுக்கும் தன்மையால், மதசாரமிதுதானென்று பகுத்தறியுந்திறமை பொதுஜனங்களுள் குன்றிவிட்டது. அவ்வறிவையூட்டிக் கடைத்தேறுமார்க்கத்தை சுட்டிக் காட்டியுள்ள, நம் தலைவிக்கு நாம் கைம்மாறாக



உதவுவதுயாதுளது? மதப்பற்றிருந்த மாத்திரமே ஸதகுருபாதங்களையணுகி விடலாம் என்று நினைப்பது வீண் எண்ணமே. ஏனெனில், அப்பற்றுள்ளவர்களில் சிலர் உன்மத்தராய் பிறமதஸ்தர்களுக்கு தீங்கு விளைப்பதை நாம் கேட்டும் பார்த்துமிருக்கிறோம். இக்காரணத்தால் சுத்தமனது மாசடைந்து தியானத்தில் நில்லாது மலினப்படும். இவ்விதக்கெடுதல் நேராமல் சுத்த சாத்விக குணம் மேலிடுவதற்கு இன்றி அமையாதவை கல்வியும் அதன் வழியே நிற்கும் விவேகமுமாம். இதையுணர்ந்தவராய், அநேக வருஷங்கள் பாடுபட்டுத்திரவியம் சேகரித்து, காசி க்ஷேத்திரத்தில் ஒரு கலாசாலையை ஏற்படுத்தினர். அக்கலாசாலையில் படித்து பட்டம் பெற்றவர்களின் ஒழுக்கத்தையும், தன்மையையும், தேசாபிமானத்தையும், ஸமரஸபுத்தியையும், எவரும் அறிந்துளார். இதன்றியும் பெரியாரிடத்தில் வணக்கமும், பூததயையும், பொது ஜனநோக்கமும், கைங்கரியத்தில் ஊக்கமும், தங்கள்பால் உதாசீனமும் ஆகியஇத்தகைய இலக்ஷணங்களை அவர்களிடத்தில் எளிதில் காணலாம். அவைகளுக்கு உற்பத்தி ஸ்தானம் எதுவென்று விசாரிக்குமிடத்து நமது அம்மையவர்களே என்பது சித்திக்கும். அம்மையார் அபரிமிதமாக இக்குணங்களையுடையவரன்றோ? அவருடைய ஸந்நிதான விசேஷத்தால் மாணவர்களுக்கு அக்குணங்களமைவது இயற்கையே.

கல்வியின் வாயிலாய்ப் படித்தறிந்தவர்களுக்கு போதிக்க வேண்டுவது ஆசாரசீர்திருத்தமே. இதையும் நம் தலைவிமறந்தவரன்றே. அதற்காக அவர் செய்த உபந்யாஸங்கள் "வேகப் இந்தியா" ("விழிமின், பாரதர்களே") என்ற ஆங்கில கிரந்தமாக பிரசுரிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் தற்காலத்தில் வைரத்துடன் பாராட்டப்படும் ஜாதிபேதத்தையும், துவேஷத்தையும், அவைகளால் விளைந்துள்ள தீமைகளையும் அதில் விரித்துரைத்துள்ளார். வஸ்துபரிசீலனம் செய்து துராசாரங்களை நீக்கி தத்துவத்தைக் கைப்பற்றும் வரையில் நம்மவர்களுக்கு ஈடேற்றமுண்டாகாதென்பதைத் தெளிவாக வற்புறுத்தியிருக்கிறார். உண்மையை எடுத்துரைத்தால் விரோதமேற்படுவது ஸஹஜமே. நன்மையை எடுத்துரைப்போர் மாட்டு நன்றிபாராட்டாது விபரீதபுத்தியால் தூஷணை செய்கிறவர்களநேகர். பெரியார் குணங்களைக் கண்டுகளித்து அவர்களை ஸேவிக்கிறவர்கள் சிலரே. ஆனால், உலகம் ஆங்காங்குள்ள சிற்சில மஹான்களாலேயே முன்னேற்றமடைகிறதேயன்றி பலராலன்று. இதை சரித்திர வாயிலாய் அறியலாம்.

இவ்வித கஷ்டசாத்தியமான விஷயங்களை எடுத்துக் கொண்டதுமன்றி சில வருஷங்களாக ராஜகீயவிஷயத்திலும்பாடுபட்டு வருகிறார்கள்.

மேற்குறித்த உத்தேசங்கள் நிறைவேறும் பொருட்டுச் சாதகமாக அந்தந்த தேச நாகரிகத்திற்கும் பொது ஆசாரத்திற்கும் முரணில்லாத அநேகக் கிளைச் சங்கங்களை ஸ்தாபித்துமுள்ளார். நம் தேச நன்மையை கருதி எவ்வழிகளில் அம்மையவர்கள் பிரவர்த்தித்து இருக்கிறார்களோ, அவைகளுக்கெல்லாம் அநுகூலமாக இதரகண்டங்களிலுள்ள பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த நமது சகோதரர்களும் சகோதரிகளும் முயற்சித்து இந்து தேச நன்மையை நாடியே உழைத்து வருகிறார்கள். இதை தினசரிபத்திரிகைகளைப்படிப்பவர்கள் அறிந்துளார். இக்காரணங்களால் இந்நாட்டிலுள்ளார் மற்ற நாடுகளிலுள்ளவர்களிடம் சகோதர பாவத்தைச் செலுத்தலும், ஏனையநாட்டார்களும் இவர்களிடத்தில் அவ்விசுவாசத்தைப்பாராட்டிப் பாடுபடலும் ஏற்பட்டன. ஸமீபத்தில், ஆங்கிலதேசத்திலுள்ளவர்களும், அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா, நியூஸீலண்டு முதலிய கண்டங்களிலுள்ளவர்களும், இந்தியாவின் புராதனநாகரிகத்தைப்பற்றியும், அதின் பூர்வதநமாகிய பிரம்ம வித்தையைப்பற்றியும், எழுதியும் பிரசங்கித்துமுள்ளதை யறியாதார் யாருளர்? இவைகளெல்லாம் நம் தலைவியின் விடாமுயற்சியால் விளைந்தனவன்றோ?

மஹாமாது ஸ்ரீ அம்மையார் அவர்கள் நம்தேச அபிவிருத்திக்காகச் செய்துள்ளவைகளை, நினைக்குந்தோறும், எடுத்துச் செப்புந்தோறும், உற்சாகத்தையடையாதாரெவருளர்? அவைகளை ஆராய்ந்தறிந்தவர்கள் அம்மையவர்கள் காட்டியுள்ள துறைகளினின்று சீர்திருத்தத்தைப் பெறுவார்களாக. அவர்கள் வயது விருத்தியாகுந்தோறும் முயற்சியும் விருத்தியாகிக் கொண்டு வருகிறதை பிரத்தியக்ஷ அநுபவமாகக்காண்கிறோம். இதற்கு காரணம் கற்பிக்க அநேகர் முயல்கிறார்கள். ஒரு விஷயம் திண்ணம். அவர்களிடம் பூர்ண அன்பைச் செலுத்தி, அவர்களால் காட்டப்பட்டுள்ள அநேக வழிகளில் ஒன்றிலாவது ஊன்றி நின்று, சுயநலத்தையேகருதாமல், தங்கள் தங்கள் பூர்ணசக்தியுடன் பற்பல காரியங்களை செய்து வருமநேக சகோதர சகோதரிகளின் சரிதைகளைப் பார்த்தால், அம்மை அவர்கள் ஸாதாரண வியக்தியன்றென்பது தெரியவரும். இதையறிந்து நடப்பவர்கள் பாக்கியமே, பாக்கியம்.

என். பி. சுப்பிரமணியன்.

# அனிபெஸண்டம்மையார்.

பெரும் தவத்தோர்களின் மஹிமையை கூறுதல் எளிதல்ல. அவர்களின் நிலைமையும் ஆத்ம பக்குவமுடையோர்களுக்கே நன்கு வெளியாகும். எனினும் அவரிடம் பக்தி பூண்ட சிறியேனுக்கு அம்மகிமை கொஞ்சமேனும் விளங்காதா என்கிற ஆவலினாலேயே இச்சிறு வியாசத்தை எழுதலானேன். எக்காலத்திலும், எந்நாட்டிலும் மஹான்களின் பெருமையை உள்ளவாறு அறிந்த ஸமகாலிகர்கள் சிலரே. மஹாக்யாதி பெற்று நிர்மலனாயிருந்த தசரத சக்ரவர்த்தியே ஸ்ரீராமன் பகவதவதாரமென்று விச்வாமிதரர் கூறியும் அறிய முடியவில்லையென்றால் ஸாதாரணர்களுக்கது எளிதில் கூடுமோ? லோகோத்தாரணார்த்தம் ஆங்காங்கு தோன்றி உலகிற்குழைத்த மஹாத்மாக்களின் உண்மையான பெருமை அனேகமாய் அவர்கள் காலத்துக்கு பின்னர்தான் வெளிவந்திருக்கிறதாகக் காண்கிறோம். இவ்விந்தியாவுக்கும் உலகம் முழுவதிற்குமே நமது **வசந்தம்மை** யவர்களாலேற்பட்டிருக்கும் நன்மை எவ்வளவென்று நிர்ணயிக்க இக்காலத்து சரித்திரக்காரர்களுக்கு முடியாதென்று நிச்சயமாய்க்கூறலாம். அவ்வம்மையைப் பின்பற்றப் பிரயத்தனிக்கிற நமக்கும் அவர்களுடைய மஹிமையின் சிற்சில பாகங்களே விளங்கும். ஆனால் அந்த பாகங்கள் மட்டுமே அவ்வம்மையிடம் நமக்கு களங்கமிலாப் பக்தியையும் உயர் நன்றியறிவையும் விளைவிக்கின்றன. அவர்கள் நமக்களித்திருக்கும் நன்மைக்குக் கணக்குண்டா? நினைக்க நினைக்க நம்மனம் “இத்தகைய மாது சிரோமணி இவ்வுலகில் இதற்கு முந்தி பிறந்ததுண்டா, இனிப்பிறக்கப்போவதுண்டோ? இவர்களை நம் தலைவியாக அடைய நாம் என்ன பாக்யம் செய்தோம்” என்று ஆச்சரியம் உண்டாகிறது.

இவ்வுலகில் யோகிகளை, ஞானயோகி, பக்தியோகி, கர்மயோகி யென்று மூன்று வகுப்புக்களாகப் பிரிப்பது வழக்கம். ஆனால் நம தன்னை யிடத்திலிந்த மூன்று வித குணங்கள் முழுவதும் அமைந்திருக்கின்றன. அத்தியாத்ம விஷயங்களை நமக்கு ஊட்டுவதில் அவர்களுக்கிணையுமுண்டோ? ஈசனிடத்திலும், அவனதுகைங்கர்யத்தையே தம்கடனாகக்கொண்டு விளங்கும் மஹரிஷிகளிடத்திலும் அன்னைக்கிருக்கும் பக்திக்கிணையுண்டா? உலகிற்கு இடைவிடாமலுழைப்பதிலவர்களுக்குச்

சமமுமில்லை. பக்தியிலும் ஞானத்திலும் பரோபகார உழைப்பிலும் இணையில்லாமல் விளங்கும் நமதன்னையை என்ன யோகியென்று பிரித்துச் சொல்வது?

மேலும் அவர்களது ஜீவித சரித்திரத்தைக் கவனித்தால் பல படிப்பினைகளையுணரலாம். ஒரு ஜீவன் அநேகஜன்மங்களில் அடையும் அனுபவங்களையெல்லாம் இந்த ஜன்மத்தில் சுருக்கமாக அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள் என்றே கூறலாம். பட்டகஷ்டங்களுக்கு கணக்கில்லை, கேட்ட தீமொழிகளுக்களவில்லை, அநுபவித்த மனோவேதனைகளுக் கெல்லையில்லை. என்ன வந்தாலும், தான் ஸத்யமென்று உணர்ந்ததைக் கைப்பிடித்து நின்ற மனோதைரியம் சொல்லொணாதது. உற்றார் உறவினர் ஆப்த நண்பர்கள் முதலியவர்களுக்காகக் கூட தான் கைப்பிடித்த சத்தியத்தை நழுவ விடாது நின்ற தைரியவதியல்லவா? "ஸத்யத்தையே பேசு, ஸத்யத்தையே நினை, ஸத்யத்தையே கொண்டு நட" என்று நமக்கு அவர்களளித்திருக்கும் உபதேசம் அவர்களிடத்திலேயே மூர்த்தீகரித்திருக்கிறது.

இப்போது இவ்வுலகிலவர்களுடைய நிலை ஸாமான்யமான ஒரு ஜீவனுடைய நிலையல்ல. தமக்காக அவர்களிவ்வுலகிலிருக்கிறார்கள் என்று நினைப்பதும் சரியில்லை. இவ்வுலகின் உண்மையான நேதாக்களாகிற மஹரிஷிகளின் ஸங்கத்தின் ஒரு பிரதிநிதியாக இவ்வுலகில் நிற்கிறார்கள். அவர்கள் செய்யும் சகல கார்யங்களும் அவ் வெள்ளையம்பலத்தின் ஆசாரியர்களுக்கேயாகும். தூல லோகத்திலும் சூக்ஷ்ம லோகங்களிலும் இடைவிடாது அகிலரும் கண்டு ஆச்சரியப்படும் வண்ணம் உழைக்கும் உழைப்பு அவ்வம்பலத்திற்கேயாம், இவ்வுலகைப் பற்றியுள்ள ஈச்வரசங்கற்பத்தை அறிந்து நிறைவேற்ற ஸந்நத்தர்களாய் விளங்கும் மஹரிஷிகளின் இச்சைக்கிணங்க உழைப்பதையே தன் ஜீவித உத்தேசமாகக்கொண்டவர்கள் நமது தலைவி. அவர்கள் செய்யும் எவ்வேலையைக் கவனித்தாலும் இவ்வுத்தேசம் விளங்கும். ராஜகீய காரியமானாலும், ஸமுதாய பரிஷ்காரமாகிலும், வித்யாப்யாச முறையை பற்றியானாலும், மத சம்பந்தமான காரியமானாலும், எந்த வேலையாயிருந்தாலும், அவருக்குள்ளது இவ்வுத்தேசமொன்றுதான்.

மேல் நாட்டுப் பிறப்பாயினும், நமது இந்தியாவைத் தன் தாய் நாடாகக் கொண்டு, தன் சகல சக்தி, தன் புத்தி, திறம் யாவற்றையும் அர்ப்பித்து ஜனங்கள் இகழ்ந்தாலும் புகழ்ந்தா



லும் நம் நாட்டின் நலத்தையே கருதி, சமயோசிதமாகவெல்லாம் இனிது அறிவுறுத்தி நம் சாசுவத நலத்துக்காகவே உழைக்கும் இந்த மஹதிக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? எனினும் அவர்களிடத்தில் அத்யந்த பக்தியுடன் அவர்கள் செய்துவரும் காரியங்களுக்கு நம்மாலியன்ற சகாயம் செய்யலாமன்றோ!

அநேக ஜனங்களுக்கு தலைமைவகிப்பது எளிதல்ல. தன்னை மறந்து, தன்னைப் பின்பற்று வோர்களுடைய நலத்தையே கோரினவிடத்தும், அப்படிப்பட்டவர்களே தன்னிடத்தில் வெறுப்பைக்காட்டவும் அதைப் பாராட்டாது அவர்களுடைய நலத்திற்காகவே தன் ஸர்வத்தையும் தியாகம் செய்யும் தலைவர்கள் இவ்வுலகிலெத்தனை பெயரிருந்தார்கள், இப்போதிருக்கிறார்கள்? மிகவும் அபூர்வம். தற்காலத்தில் கியாதிக்காகவும் பொது ஜனங்களுடைய புகழுக்காகவும் உழைக்கிறவர்களநேகர். தன்காரியம் சித்திபெறும் வண்ணம் ஜனங்களை நடத்தும் தலைவர்களுமநேகர். ஆனால் அவர்கள் பேரும் புகழும் நெடுங்காலம் நிலைபெறா. நம் அன்னையோ தலைமை வகிக்கும் சாமர்த்தியத்தை நமக்கு நன்கு விளக்கிக்காட்டும் ஜீவரத்தினம். இத்தகைய தலைவியை வழிபட நாம் என்ன பாக்யம் செய்தோமோ?

அவர் நம் நாட்டிற்காக செய்திருக்கிற அநேக கைங்கரியங்களில் நம் தேசத்து கலைகளை தழைப்பிக்க அவர்கள் செய்யும் பிரயத்தினங்களைப் பற்றி சற்று இங்கு கூறுவோம். ஒரு தேசத்தின் உண்மையான பெருமை அதன் தனத்தாலோ, விஸ்தீர்ணத்தாலோ அல்ல. அந்நாட்டின் கலைகள் தான் சாசுவதமான புகழுக்குக் காரணமாகின்றன. ராஜ்யம் சிறியதானாலும், அந்நாட்டில் சித்திரம், சில்பம், ஸங்கீதம், கத்யபத்ய கிரந்தங்கள் முதலியன அபிவிருத்தியடைந்திருக்குமாயின் அதன் பெயர் எங்கும் எக்காலத்திலும் விளங்கும். ஒரு நாட்டின் கலைகள் மங்குமாயின் அந்த ராஜ்யத்திற்கே அது க்ஷேமக்குறைவாகும். உறங்கிக்கொண்டிருந்த ஒரு தேசம் விழிக்கத்தொடங்குங்கால் அதன் கலைகளும் செழித்தோங்கவேண்டும். இதை நன்குணர்ந்த நமதன்னை தாம் நேராக மற்ற விஷயங்களிலுழைப்பதுபோல் இதற்குச் சௌகர்யமில்லையெனினும் தம்மாலியன்றமட்டும் ஜனங்களுக்கு உற்சாகமூட்டியிருக்கிறார். அவர்களுடைய சிஷ்யர்கள் அனேகர்கள் ராஜ்யபரண, ஸமுதாய பரிஷ்காராதி கார்யங்களிற்போல்

நமது கலாசாஸ்திரங்களை உத்தாரணம் செய்வதற்கும் உழைத்து வருகிறார்கள். 1921ஆம் கிளப்பின் கலாசாஸ்திர வகுப்பு புரியும் உதவி எல்லாருக்கும் தெரிந்ததே. 1908-ம் வருஷம் மார்ச்சு மாதம் 7-ம் தேதியில் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸபையின் வருஷோற்சவத்தில் நமதன்னையவர்கள் "மதமும் ஸங்கீதமும்" எனச் செய்த பிரஸங்கத்தைப் படித்துப் பார்ப்போர்களுக்கு, ஸங்கீதத்தின் அந்தரங்க விஷயங்களில் அம்மையாருக்கு எத்தகைய பரிசயமுண்டென்பது வெளியாகும். மேலும் நமது இந்திய ஸங்கீதத்தின் விசேஷங்களைத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். சென்ற வருஷம் அக்டோபர் மாதம் திருவனந்தபுரத்தில் கூடின **கலாசாஸ்திர ஸம்மேளனத்திற்கு** அவர்களக்ராஸனம் வகித்து செய்த உபந்யாஸத்தைக் கேட்டவர்கள் அனைவரும் திகைத்து நின்றார்கள். கலைகளின் மர்மமென்னவென்பதையிவ்வளவு தெளிவாக எடுத்துரைப்பது அபூர்வமேயாம். அப்போது நான் கேட்ட மொழிகள் இன்னுமென் காதுகளில் த்வனித்துக்கொண்டே இருக்கின்றன. அடையாற்றில் டிசம்பர் மாதத்தில் பிரம்மஜ்ஞான ஸம்மேளனத்துடன் நடந்த கலைத்தொழிற் காட்சியால் நமது தேசத்தின் கலைகளுக்கு ஏற்பட்டிருக்கும் நன்மை வெகுமதிக்கத்தக்கதே. இப்படி பல விதங்களில் நமது கலைப்பயிற்சிக்கு ஜீவனையும் சக்தியையும் அளித்து வருகிறார்.

அவ்வம்மையாரின் 77-ஆம் வயது இம்மாதம் முதல் தேதி ஆரம்பம். இன்னும் இவ்வுலகில் அநேக வருஷங்கள் தூல தேகத்துள்ளிருந்து, இதுவரை நமக்கும் உலகிற்கு முழைத்தது போலின்னு முழைத்து, மஹரிஷிகளின் உத்தேசத்தை இவ்வுலகில் நிறைவேற்றி, அம்மையாரது பாதத்தைக்கைப்பற்றிய நம்மை அருமையான உபதேசங்களால் மேன்மேலும் நல்வழியிற் செலுத்தி நாமும் அம்மஹரிஷிகளின் திவ்ய பாதங்களையடையும்படியாக அநுக்ரஹித்து, எங்கும் புகழ்பெற்று அலகிலா வானந்தத்துடன் ஜீவித்திருக்கும்படி கருணாகரக் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

ரா. ஸ்ரீநிவாஸன்.

---

# லோகோபகாரியும் தீர்க்கதரிசியுமான ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் அம்மையார்.

---

உலக க்ஷேமத்திற்காகத்தம் உடல், பொருள், ஆவிகளை அர்ப்பித்துவரும் இம்மாது சிரோமணியின் ஜீவித சரித்திரத்தை யான் எழுதப்புகுவது ஒரு மிக்கதுணிகரமான பிரயத்தனம். அச்சரித்திரத்தை விளக்கமாகவும், பூர்ணமாகவும் ஒரு வியாசரூபமாகவரைதல் சற்றும் இயலாத காரியம். தங்களுக்கு நிகரில்லை என நினைத்துக் கொண்டிருந்த மேதாவிகளும், இந்த அம்மணியுடன் பழகின மாத்திரத்தில், அவரது பெருமையையும், தங்களது சிறுமையையும், உணர்ந்திருக்கின்றனர். அவருடன் பழகி அவரை அறியமுயன்ற எவர்க்கும் உண்டாகும் எண்ணம் என்னவெனில், "அவர் குணாதிசயங்களை நம்மால் முற்றிலும் அறிதல் முடியாது" என்பதே. இத்தகைய அநுபவத்தால் வாஸ்தவபக்தி விசுவாசம் உண்டாக வேண்டியிருக்க, சிலர்க்கு அது பொறாமையை உண்டு பண்ணுகிறது. அவரது ஆத்மஜோதிக்கு நாம் வெகு சமீபத்தில் இருப்பதால், அதன் பிரபாவத்தை நம்மால் இப்பொழுது அறிய முடியவில்லைபோலும்! நன்மைக்கு உழைப்பதில் அபாரசக்தியும் ஊக்கமும், கொடுமையை ஒழிக்கப் போராடுவதில் அஞ்சாநெஞ்சமும், பிடிவாதமும், சற்றும் சுயநலம் கருதாத அன்பும், பரோபகார சிந்தையும், ஞான மார்க்கத்தை அனுஷ்டிக்க விரும்புவோர்க்கு நிச்சய புத்தியை அளிக்கத்தக்க ஆத்மசக்தியும் வாய்ந்த இவரது பெருமை ஒரு வேளை ஐம்பது அல்லது நூறு வருஷங்களுக்குப் பின், அதாவது இவரைப்பற்றிஏற்படக் கூடிய அல்பமான தர்க்க வாதங்களும் தப் பெண்ணங்களும் ஒழிந்த பின்னரே உள்ளபடி விளக்கமாக உலகினர்க்குப் புலப்படும். நம் காலத்திலேயே, மதராசில் கவர்னராயிருந்த ஸர் ஆர்தர் லாலி இவரைப்பற்றிச் சொன்னதாவது. "ஸ்ரீமதி பெஸண்ட் அம்மை பேசும்போதெல்லாம் கேட்பவர்களுடைய ஹிருதயத்தில் மேலான எண்ணங்களும் உயர் லக்ஷியங்களுமே நிலைபெறும்." என்பதாம். இங்கிலாந்தில் தொழிலாளர் கக்ஷியில் ஒரு தலைவரான ஸ்ரீமான் லான்ஸ்பரி "இவ்வம்மாள் உலகத்தில் ஓர் விசேஷ சாமர்த்தியம் வாய்ந்த நிர்மாண கர்த்தர் ஆவர்" என்றார்.

இப்பெரியாரது ஜீவித சரித்திரத்தை தமிழில் சுருக்கி எழுதும் சக்திமான்கள் அதை சீக்கிரத்தில் எழுதுவார்கள் என்று

நம்பி அவர் வாழ்க்கையின் சில அம்சங்களை மட்டும் இங்கு எழுதத் துணிகிறேன்.

இன்றைக்கு 76 வருஷங்களுக்கு முன் அதாவது 1847-ஆம் வருஷம், அக்டோபர் மாதம் முதல் தேதி யன்று மாலை லண்டன் நகரில் எச்செல்வாக்குமின்றி ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே ஞானாதிபர்களாகிய குருதேவர்களின் சிஷ்யராய் உலகிற்கே ஒரு பேருபகாரியாகி, மேனாடுகளில் அன்னிபெஸண்டு என்றும் கீழ் நாடுகளில் “அம்மாள்” என்ற பிரியப் பெயராலும் யாவருமறிய, விளங்கும் நமது பெருமாட்டி யாவர்.

அவரது வாழ்க்கையை நாம் உற்று நோக்குங்கால், இரண்டு விஷயங்கள் விசேஷமாய்த் தென்படுகின்றன. அவை ஜனங்களுடைய குறைபாடுகளையும், துன்பங்களையும் ஒழிப்பதற்குப் போராட முன் வந்து நிற்றலும், உண்மையைக் கைப் பிடித்து ஒழுகுவதில் தமக்கு மிகவும் நெருங்கின சுற்றத்தாரையும் இன்னும் தமது வாழ்க்கை நலம் எதையுமே துறத்தலுமாம்.

இவ்விரண்டுடன் இன்னுமொரு குணாதிசயமும் அவரிடத்திலுண்டு. பொது நல உழைப்புக்கு முன் வரும்போதெல்லாம் நியாயக் கக்ஷி யறிந்து சேர்ந்து வெற்றி பெறும் மார்க்கங்களைப் பகுத்தறியக் கூடிய நுண்ணறிவு வாய்ந்தவர். அவர் ஆரம்பித்த லோகோபகாரக முயற்சிகள் எல்லாவற்றிலும் வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறார். எதாயினும் ஒன்றில் ஒருக்கால் தோல்வியுற்றிருந்தால் அது அக்காலத்தில் அவர் மட்டில் அபஜயமாயிருந்து பின்பு உலகினருக்கு அவர் எந் நன்மைக்காக உழைத்தாரோ அந்நன்மை நாளடைவில் கைகூடியிருப்பதைக் கண்டிருக்கின்றோம். ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் ஈசுவரன் அமைத்திருக்கிற வருங்கால முறையை உணர வல்லவர் இவர் என்பது இதனால் விளங்குகின்றதல்லவா? அல்ப சக்தியுள்ள மனிதரது மூளைத்திறத்திற்கு மேற்பட்ட விஷயங்களைக் கண்டுணரக் கூடிய இவர் லோகரக்ஷகர்களாகிய மகாத்மாக்களுடைய தூதர் என்பதில் ஐயமில்லை.

அவர் வாழ்க்கையிற் சில முக்கிய சம்பவங்களை இங்கு சற்று கவனிப்போம். அன்னிபெஸண்ட் அம்மையாரது மனோதிடத்தை நிலை நாட்ட வந்த பரிசோதனைகளுக்குள் முதலாவது 1873-ஆம் வருஷம் எற்பட்டது. இவரும் தம் குடும்பத்தாரும் சார்ந்திருந்த கிறிஸ்தவ மதத்தின் அனுஷ்டானங்களில் இவருக்கு நம்பிக்கை எற்படவில்லை. ஆனால் அவைகளை ஒப்



புக்கொள்ளாமையால் தமதுறவினர், ஜனங்களின் நன்மதிப்பு, செல்வம் யாவையும் இழக்க நேர்ந்ததில், இவர் அவற்றை யெல்லாம் உதறியே, அரிச்சந்திர மகாராஜன், “பதி யிழந்தனம், பாலனை யிழந்தனம், படைத்த நிதி யிழந்தனம், இனி நமக்கு எனதென நினைக்கும் கதி யிழக்கினும் சட்டுரை இழக்கிலேம்” என்றவாறு, “எதை இழக்கினும் மனச்சாக்ஷிக்கு விரோதமாக நடக்க மாட்டேன்” என்று உறுதியுடன் சத்தியத்தையே கைப்பற்றி நின்ற பெருமையை என்னென்பது!

அவரது 27-ஆம் ஆண்டில் அதாவது 1874-ஆம் வருஷத்தில் அவர் இங்கிலாந்து தேச லௌகிக சங்கத்தில் சேர்ந்து, அந்நாட்டில் குடிகொண்டிருந்த மூடநம்பிக்கைகளையும், மதபேதவாதிகளைப் படுத்தும் கொடுமைகளையும் அடியோடு ஒழிப்பதற்காக அநேக முயற்சிகள் செய்தார். அக்காலம் லண்டன் நகரில் ஜன சமூக வாழ்க்கை பரிதாபகரமான நிலைமையில் இருந்தது. பால்ய விவாகத்தாலுண்டாகும் குடும்ப பாரம் ஒரு பக்கம், முதுமை விவாகத்தின் தீங்குகள் மற்றொரு பக்கம், இத்துடன் நீங்காத் தரித்திரம், ஆகிய இவ்வகைத் துன்பங்கள் நிறைந்திருந்தன. ஜனங்களுடன் வெகுகாலம் கூடிப்பழகின நம் அம்மாள், அவர்களுக்கிரங்கித் துயரங்களை நீக்க ஒரு வழி யுணர்ந்தாள். அதாவது குடும்பம் பெருகாமற் சில முறைகளை அனுஷ்டிக்க வேணும் என்பதே. இவ்விஷயமாக அமெரிக்கனாகிய டாக்டர் நோல்டனால் முன்னமேயே அச்சிட்ட துண்டு பத்திரிகையை, நமது அம்மாளும், பிராட்லாவும் சேர்ந்து பிரசுரித்துவிற்றதன் பயனாக சட்டம் மீறி அநாசாரவிஷயங்களைப் பிரசுரித்ததாகக் குற்றஞ் சாட்டப் பெறவே, இவ்விருவரும் தங்களது தைரியத்தினாலும் பேசும் வல்லமையினாலும், விஷயத்தின் உண்மையினாலும் தாங்கள் செய்தது குற்றமே யல்லவென்று நிரூபித்தார்கள். இவ் வெற்றி நிகழ்ந்தது 1877-ஆம் வருஷம்.

இதே வருஷத்தில், குழந்தைகளை வளர்க்கத் தாய்க்கு உரிமையில்லை என்னும் ஓர் கொடுஞ் சட்டத்தை எதிர்த்தார். தம் கணவனாகிய மிஸ்டர் பெஸண்ட் நாஸ்திக வாதியாகிய தன் மனைவி தன் குழந்தைகளை வளர்ப்பதற்கு அருகமானவளல்ல என்று பிராது செய்தார். அந் நாட்டுச் சட்டப் பிரகாரம், அம்மாள் தமது குழந்தைகளை விட்டுப் பிரிய நேர்ந்தது. குழந்தைகளின் பிரிவாற்றாமையினால் அவர் பட்ட கஷ்டம்

கொஞ்சமல்ல. அவரது 32-ஆம் வயதில் அவர் மாதக் கணக்காகப் படுத்த படுக்கையாகவே இருந்தார். ஆனால் நாம் இங்கு ஒன்று கவனிக்கத்தக்கது. அவருக்கு வழக்குத் தோற்றுப் போயினும், கொஞ்ச நாட்களுள் அக்கொடுஞ் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

1880-ஆம் வருஷம் ஸ்ரீமான் ப்ராட்லா நார்த் தாம்ப்டன் ஷைர் தொழிலாளிகளால், பார்லிமெண்டு மகா சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் கிறிஸ்தவ வேதத்தைத் தொட்டு சத்தியம் செய்யாத அவரைத் துரைத்தனத்தார் மெம்பராக ஏற்றுக் கொள்ள வில்லை. ஒருவனை மனச்சாக்ஷிக்கு விரோதமாகச் செய்ய வற்புறுத்தும் இக்கொடுங் கோன்மையை நீக்க நமது அம்மாளும், பிராட்லாவும் ராஜாங்கத்தாரை எதிர்த்து ஜயித்தனர். அக்காலத்து அவர் ராஜாங்கப் பொக்கிஷத்தைக் குறைக்க வழிகளை ஜனங்களுக்குக் காண்பித்து, சர்க்காரை ஜனங்களுடைய வழிக்கு வரும்படி செய்தார்.

1881-ஆம் வருஷம், உயிர்ப் பிராணிகளை வெட்டிப் பரீக்ஷிக்கும் மிகக்கொடிய வழக்கத்தைக் கண்டித்தார். 1883-ஆம் வருஷத்தில் இவர் இலௌகிக விஷயங்களைப் போதித்து ஈசுவர தூஷணமான புஸ்தகங்களை எழுதுகிறார் என்று பெரிய சட்டநிபுணர்களால் குற்றம்சாட்டப்பட்ட காலத்தில், எவர்க்கும் தமது அபிப்பிராயங்களை வெளியிடும் ஸ்வாதந்த்ரிய முண்டென்று வாதாடிக் கடைசியில் இவரே ஜயித்தார்.

1884-ஆம் வருஷம் ஜன சமுதாய சீர்திருத்தம் செய்வதற்காக பேபியன் ஸொஸைட்டி என்ற சங்கத்தைச் சேர்ந்தார். இவர் இம்மாதிரி செய்ததால் ராஜதந்திர விஷயங்களில் தம் குருவாயிருந்த பிராட்லாவை விட்டுப்பிரிய நேர்ந்தும், சற்றும் மனந்தளர வில்லை. ஏனெனில் ஜன சமுதாயச் சீர்திருத்த மூலமாகவே உலகில் கஷ்ட நிவாரணமும், ஐக்கியமும், சோதர பாவமும் நிலைபெறும், என அவர் நிச்சயம் கொண்டபடியால், அதற்கு எதையும் தியாகம் செய்யத் தயாராயிருந்தார். ஏழை ஜனங்களின் அற்பக் குற்றங்களுக்காக பெரும் அபராதம் விதிக்கப்படுவதும் சில சமயங்களில் தப்புக் குற்றம் சாட்டப்பட்டு மனைவி மக்களை விட்டுச் சிறை புகும்படி நேருவதும், போன்ற இவ்வளவு அநியாயங்கள் இருந்தன. இத்துன்பங்களிலிருந்து பாதுகாக்க "ஜன சமூகப் பாதுகாப்புச் சங்கமும்" "ஸ்வாதந்த்ரிய உரிமைச் சங்கமும்" ஸ்தாபிக்கப் பட்டன.



1888-ஆம் வருஷம், "பிரையண்ட் அண்ட் மேஸ்" என்ற நெருப்புப் பெட்டித் தொழிற் சாலையில் உழைத்த பெண்களுக்காக "நெருப்புப் பெட்டித் தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்தார். இங்கிலாந்தில் முதன் முதல் ஏற்பட்ட அத் தொழிலாளர் சங்கம், இப்போதும் மிகப் பிரபலமாயிருக்கின்றது. சொற்பக் கூலியைப் பெற்றுத் தம் கஷ்டங்களை முறையிடக் கூட அசக்தர்களாயிருந்த அவர்களின் சார்பாக அன்னிபெஸண்ட் அம்மையார் உழைத்த உழைப்பின் விவரங்களும், தொழிற்சாலை முதலாளிகள், அவரைப் பயமுறுத்தின சங்கதிகளும் அவர் எழுதியிருக்கும் ஸ்வசரித்திரத்தைப் படித்தால் நன்கு விளங்கும். இது போன்ற பேருதவிகள், தகரப் பெட்டித் தொழிலாளர்களுக்கும், துறைமுகத்து வேலை யாட்களுக்கும் செய்திருக்கிறார்.

அதேவருஷத்தில் நமது "அம்மாள்" லண்டன் ஸ்கூல் போர்டுக்கு மெம்பராகத்தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்போது அவர் செய்வித்த முக்கிய அநுகூலங்கள் இரண்டு மிகவும் கவனிக்கத்தக்கவை. அவையாவன. (1) அரைவயிற்றுக்குக் கூட உணவில்லாத ஏழைக்குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுமுன் சரியான ஆகாரமளித்து, பாது காத்தல் வேண்டும் (2) தொழிலாளர் சங்கத்து சட்டங்களுக்கு விரோதமாக தொழிலாளிகளிடத்தில் வேலை வாங்குவதில்லை யென்ற உறுதிமொழி ஸ்கூல் போர்டுக்குக் கொடுத்த ஒவ்வொரு உடன்படிக்கையிலும் எழுதப்படல் வேண்டும். இவற்றால் உண்டான நன்மைகள் அற்புதமானவை. படிப்பதற்கு சிறிதும் சிரத்தையில்லாத மட்டிகளும் புத்திசாலிகளானது மிகவும் ஆச்சரியகரமாயிருந்தது. இதைக் கண்டு முனிசிபாலிட்டியிலும் சர்க்காரிலும் இதேமுறையை அனுசரிக்க ஆரம்பித்தனர். இதனால் தொழிலாளிகளுக்கு ஏற்பட்ட ஆண்மை கொஞ்சமல்ல.

இச்சமயத்தில் தான் "அவர் கார்னர்" என்ற ஆங்கில பத்திரிகையில் பின் வருமாறு அம்மாள் எழுதினர்:—"சமீப காலத்தில் அநேகருள்ளத்தில் ஒருவித புதுக் கிளர்ச்சி உண்டாயிருக்கிறது. அதாவது சகல ஜனங்களும் சகோதர பாவத்தை அடைய வேண்டும், லோகோபகாரமே ஈசுவரனுக்குப் பிரியமான கைங்கரியம், பொது நலத்திற்கு உழைப்பது தான் பெரிய பூஜை, அன்பு தான் மனிதனைப் புனிதப்படுத்துகின்றது, பொது நன்மைக்காக உழைக்கப் புகுந்த எவனும் நமக்கு அயலானல்லன் நம்மைச் சேர்ந்தவனே."

தமது ஆயுள் முழுவதும் சேர்ந்து இருந்த ஆப்த நண்பர்களையும் ஜனங்கள் நன்மதிப்பையும் தம் புகழையும் பெயரையும் இன்னும் யாவையும் இழப்பதாக விருந்தாலும், சத்தியத்தை அன்னிபெஸண்ட் அம்மையார் கைவிடவே மாட்டார் என்பதற்கு நிகரற்ற நிதர்சனமாக 1889-ஆம் வருஷம் மே மாதம் 10-ம் தேதி ஒரு துணிகரமான காரியம் செய்தார். அன்று தான் அவர் பிரம்மஞான சபையில் (Theosophical Society) அங்கத்தினரானார். அப்பொழுது அவர் ஸத்தியத்திற்காகச் செய்த தியாகம் பெரிதும் வியக்கத் தக்கதே. அந்த சபையைச் சேருவதற்கு அவரைத் தூண்டின காரணங்களையும் அப்பொழுது நடந்த சம்பவங்களையும் விவரிக்க இங்கு இடம் இல்லை. ஆனால் அஞ்ஞானத்தில் முழுகி இருக்கும் ஜனங்களுடைய அபவாதத்திற்கு சிறிதும் அஞ்சாமல் உண்மையைக் கைப்பற்றி நடந்தது நாம் எக்காலத்தும் மறக்கவொண்ணாத ஒரு பெரிய வீரச் செயல் என்பதில் ஐயமில்லை.

அவர் 1893-ஆம் வருஷம் இந்தியாவிற்கு வந்தார். அன்று தொட்டு இன்று வரை முப்பது வருஷங்களாகத் தமது ஸ்வீகாரத் தாய் நாடாகிய இந்தியாவின் க்ஷேமத்துக்காக இடைவிடாமல் உழைத்திருக்கின்றார். மதம் கல்வி யபிவிருத்தி, ஜனசமூக, ராஜாங்கமுறைச் சீர்திருத்தங்கள் இப்பலவழிகளில் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டிருக்கின்றார். நம் தேசத்தில் ஒவ்வொருவரும் தான் பாரத மாதாவின் குழந்தை என்று தன்னை கௌரவத்துடன் கருதும்படியான நிலைமைக்கு இந்தியர்களைக் கொண்டு வந்ததும், பெண் கல்வி அவசியமென்று வற்புறுத்தியதும், பஞ்சமர்கள் முன்னேற்றமடைவது அவசியமெனக் காட்டியதும், வெகு பள்ளிக் கூடங்களில் மத போதனையை கட்டாயப் படுத்தினதும் பால்ய விவாகம், தீண்டாமைகளாலாகும் தீங்குகளை ஒழிக்கப் போராடினதும், இந்த அன்னிபெஸண்ட் அம்மையாரல்லவா? இவை மாத்திரமோ! இந்தியாவில் முதன் முதல் ஏற்பட்ட தேசீயக் கல்லூரியான ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ், இந்திய, பாய்ஸ் கவுட் சங்கம் ஆரம்பத்துக்கு வெகு நாளைக்கு முன்னேயே ஏற்படுத்தப்பட்ட "ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் மாணவர் படை" ஹோம்ரூல் சங்கங்கள், என்ற இவற்றை எல்லாம் ஸ்தாபித்தவரும் இவரே. தமது பல அரிய நண்பர்களின் ஸ்நேஹத்தை இழந்து விடுவோம் என்று அறிந்திருந்தும், மிகுந்த உற்சாகத்துடன் "உதயதிசை நக்ஷத்திர சங்கத்தை" ஸ்தாபித்தார். இவர் செயல்கள் உலகத்துக்கே வழிகாட்டும்படி



யான அரியகாரியங்கள். இவர் தாம் தனியே எண்ணித் துணியும் எம்முயற்சியும் காலாந்தரத்தில் கைகூடி உலகினரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதனாலேயே இவர் ஒரு தீர்க்கதரிசிஎன்பது நிரூபணமாகின்றது. அவர் உலகிற்குச் செய்த நன்மைகளை இன்னவென்று ஒவ்வொன்றாகச் சொல்லலும் இங்கு முடியாது என்றால் அவைகளைப் பற்றி விஸ்தரிக்க இடம் ஏது?

"அன்னிபெஸண்ட் அம்மாளது தைரியத்தையும் ஊக்கத்தையும் கவனிக்கையில் மிக்க அபாயங்களும் சிரமமும் நிறைந்த அரிய வீரச்செயல்களை இயற்றுவதற்கென்றே அவர் ஏற்பட்டவரோ" என்று இவர் நண்பரும் பேபியன் சங்கத்தில் இவருடன் மெம்பராகவும் இருந்த பர்நார்டுஷா என்பவர் கூறியிருக்கிறார். நம் அம்மாள் பிறருக்கு உபகரிப்பதிலே தளரா விடா முயற்சியுடையவர்.

கல் மனத்தையும் உருக்கும்படியான அவரது ஒப்பற்ற வாக்கின் வல்லமையைப் புகழல் அசாத்தியம் "ஜனக்கூட்டங்களுக்கு மேடைமேலேறிப் பிரசங்கிக்கும் வாக்குவல்லபத்தில் லோகப்பிரசித்திபெற்ற டிமாஸ்த்தனிஸ், ஸிஸரோ என்றவர்களும் பெஸண்ட் அம்மாளுக்கு நிகராகார் என்று கீர்த்திபெற்ற ஆங்கிலப் பத்திராசிரியரான W. T. ஸ்டெட் புகழ்ந்து பேசியிருக்கின்றாரெனில், அவரது பிரசங்க வல்லமையை மறுக்க எவராலாகும்?

எப்போதும் தளரா ஊக்கமும், அஞ்சா நெஞ்சமும், எல்லோரிடத்தும் அளவிலாப் பேரன்பும் ஆகிய இக்குணாதிசயங்கள் இவ்வம்மணிக்கு எவ்வாறு ஒருங்கே அமையப்பெற்றன? இக்கேள்விக்கு உத்தரம், அவருடைய சில மொழிகளிலேயே காணக்கிடக்கின்றது. அவரது மாகாத்மியத்தை அறிய இயலாத சாமானியர்கள் அவ்வற்புத மொழிகளைத் தற்புகழ்ச்சியென்பார்கள். எனினும் அம்மாள் கூற்றைக் கவனியுங்கள்:

"உலகத்துன்பங்களை நிவர்த்திக்கவேண்டும், உலகக்ஷேமத்திற் குழைக்க வேண்டும், உலகத்தாரைக் காப்பாற்றவேண்டும் என்ற பேரவா என் உள்ளத்தில் வேரூன்றிக் கிடந்தது. உலகத்தாருடைய நன்மதிப்பை முன்னமேயே இழந்து விட்டேன். இப்பொழுது என் வாழ்க்கை நலங்களையும் சௌகரியங்களையும் தத்தம் செய்து விட்டேன். நான் தியாகம் செய்யும்போதெல்லாம் சகல ஜீவகோடிகளிடத்தும் எனக்குக் கருணை அதிகரித்துக் கொண்டே வந்தது. லோக கைங்கரியத்தின் பொருட்டு சுய நலத்தை மறந்தவர்களாய், கைம்மாறு

கருதாத பேரன்பினராய் உலகத்தைப் பிரகாசிப்பிக்கின்ற தீபங்களுக்கு மறைந்து நிற்கும் திரிபோன்றவர்களாய் உள்ள மகான்களால் மட்டும் அறியத்தக்க பெரிய துறவு மார்க்கத்திற்கு சமீபத்தில் நான் கனவிலும் எதிர்பாராதபடி என்னை இழுத்துக் கொண்டு வந்து விட்டது நான் செய்த தியாகங்களே."

இப்பொழுது 77-ஆம் ஆண்டில் அவருக்கு இருக்கும் ஊக்கமும் உற்சாகமும், யௌவனத்தில் இருக்கும் பலரையும் நாணச் செய்யும்படியானதாக இருக்கின்றன. ஒரு வாலிபர் கூட்டத்திலேயே அம்மாள் பின் வருமாறு பேசியிருக்கிறார்:— "நான் விருத்தாப்பியத்தை யடையவே மாட்டேன் எந்த நாளில் எனது சரீரம் ஈமத்தீக்கு இரையாகுமோ, அந்த நாள் வரை அதில் யௌவனத்தீயானது ஜொலித்துக் கொண்டேயிருக்கும்."

"அந்த நாள்" இன்னும் வெகு காலத்திற்கு அணுகாது இருக்கும்படியாக சர்வ வல்லமையுள்ள ஈசுவரன் அருள் புரிவாராக.

யம். யன். ராமஸ்வாமி ஐயர்.

---

# ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்.

---

நவம்பர் 1923 5-ஆம் வாரம்

## இந்திய பிரிடிஷ் போது ஆட்சி

மனிதவர்க்கம் மேன்மேலும் நாகரிகத்தில் சிறப்புற்றோங்கி வரும் முறையைச் சரித்திரவாயிலாக கூர்ந்து ஆராய்வோர்க்குப் புலப்படுவது என்னவெனில், வெவ்வேறு முறைகளில் உயர்வுற்றிருக்கும் வெவ்வேறு தேசத்தவர்களின் வெவ்வேறு லக்ஷியங்களையெல்லாம் தொகுத்து, அதன் பயனை பரமதர்மத்தை ஓர் காலத்தில் உலகினர் அனைவரும் கைக்கொள்ள நேருகிறது. பொதுப்பட இருவகை நாகரிகங்கள் இப்போது இவ்வுலகில் வழங்குகின்றன. பரலோக க்ஷேமத்தைப் பெரிதும் கருதிய கீழ்த்திசையோர்களின் பூர்விக நாகரிகம் ஒன்று. மற்றொன்று இவ்வுலகசுகத்தைப் பெரிதுங்கருதிய மேற்றிசை



யோரின் நவீன நாகரிகம். இவற்றிற்கு முறையே இந்தியாவும் இங்கிலாந்தும் சரியான உதாரணங்கள். ஏனெனில் கீழ்த்தேசங்களில் ஆரியரின் மூலஜாதி குடியேறித்தங்கியது நம் இந்தியாவே. வைவஸ்வத மநுவானவர் நியமித்த கடமையைச்செய்வதுதான் நமக்கு தர்மம் எனக்கொள்வது இந்தியாவே. ஆசியாவிலும் பொதுவாய் உலகெங்குமே பரவிய பௌத்தமதம் உதித்தது இந்தியாவிலேயே. தொன்றுதொட்டுவந்த நாகரிகம் இந்தியாவிலே நிலைபெற்றிருக்கிறபடியால், நம் தேசத்தையே பூர்விக நாகரிகத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இனி இங்கிலாந்தைப்பற்றி விசாரிப்போம். மனிதரின் வாழ்நாள்முறைக் கவசியமான பிரவிர்த்திகளில் எத்துறைகளிலும் கலகத்தால் சடிதியான மாறுதல்களைச்செய்ய யத்தனிக்காதது மேல்நாடுகளுள் இங்கிலாந்து தேசம் ஒன்றேயாம். அத்தேசத்தார் தங்கள் பிறப்புரிமையைக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்துவந்தனர். அதற்குக் கேடுவருமெனக் கண்டவுடன் "ஸ்வதந்த்ரத்தை" விடமாட்டோம் எனக் கூக்குரலிடுவர். பிறநாட்டாருடைய ஸ்வாதந்த்ரியத்துக்காகவும் முயன்றது இங்கிலாந்து ஒரு தேசமேயாம். மேல்நாடுகளெல்லாவற்றின் சரித்திரத்தையும் படிக்குங்கால், சுயநன்மை வரவும் நடுநிலைமை பறந்துபோயிற்றென்பது, இங்கிலாந்தைப் பற்றி வெகுவாய்ச் சொல்லமுடியாது. ஆயினும் அத்தேசத்தின் கொஞ்சநஞ்சமான சுயநலத்தாலும் எவ்வளவோ அநர்த்தம் விளைந்திருக்கிறது நாமறிந்ததே.

ஆகவே வெவ்வேறு வழிகளில் வந்த இவ்விரு நாகரிகங்களும் ஒருங்கு சேருதல் அவசியம். அதற்கு இரு நாகரிகத்தார்களும் சமபாவனையல்லவோ அடைதல் வேண்டும்? நமக்கு நிகரில்லையென்று இருதிறத்தாரும் இறுமாப்படைவரேல் ஒற்றுமை கைகூடாது. இவ்வொற்றுமையின்றி உலகம் நலம் பெறாது. வெறும் போட்டியாலும் பொறாமையாலும் கெட்டழிந்த இவ்வுலகத்தில் இப்போது தான் ஆங்காங்கு நலமோங்கத் தலைப்படுகிறது. 'ஸ்வதேசியத்தீர்மானம்' என்கிறார்கள். 'ஸர்வதேச ஐக்கிய சங்கம்' என்கிறார்கள். எத்தேசத்தாரும் மட்டுக்கு மிஞ்சிய சைநியத்தை தமக்குள்ளே முதலில் ஒழிக்க வேண்டுமென்கிறார்கள். 'சிறுபான்மையோர்க்கும் உரிமைகளுண்டென்கிறார்கள். ராஜதூதகாரியங்களில் உண்மையை மறைக்காமல் பஹிரங்கமாயிருத்தல் வேண்டுமென்கிறார்கள்.

வர்த்தகமுறையில் கடல் மார்க்கங்கள் யாவர்க்கும் பொதுவென்கிறார்கள். இப்படி ஒவ்வொரு வகையிலும் ஒற்றுமை நிலை பெற ஆரம்பிக்கிறது. இவ்வாறானபல விஷயங்களைக் கேட்க யாவர்க்கும் ஓர் குதூஹலமும் உற்சாகமும் உண்டாகின்றன. பற்பல தேசத்தார்களும் அந்யோந்யமாகி, உலகனைத்தும் பொதுவாய் ஓர் குடையிலமரும் என்ற நம்பிக்கை உண்டாகிறது. இதற்கு இந்திய பிரிடிஷ் பொது ஆட்சி யல்லவோ முதற்படியாய் ஆரம்பித்தல் வேண்டும்? இந்தியா சுய ஆட்சியடையாத வரைக்கும் இக்கருத்து எங்ஙனம் நிறைவேறும்? இது தான் இப்போது நம் கவலை. சுய ஆட்சிபெற்ற இந்தியாவும் இங்கிலாந்தும் கைகோத்து நின்று பொது ஆட்சியை ஏற்படுத்துவர்களேயானால், அதனால் இவ்வுலகம் அடையக்கூடிய நன்மைகள் எண்ணிறந்தன. உலகமுன்னேற்றத்தைக் கருதியே இந்தியாவானது சுய ஆட்சியைப் பெறுதல் இன்றியமையாதது.

மேலும் இவ்வொற்றுமை ஏற்படுமானால் இருதிறத்தாருடைய நாகரிகமும் நலம்பெற அமையும். எப்படியெனில் இருதிறத்தார்க்கும் இப்போதைய நிலையில் சில மேன்மையான குணங்களும் அவற்றையொட்டியே சில தோஷங்களும் ஸஹஜ தர்மமாய் அமைந்து நிற்கின்றன. இக்குண வேறுபாடுகளை ஒழிப்பதற்கு பரஸ்பர சிநேகம் கட்டாயம் வேண்டும். மிதமிஞ்சிய நற்குணமும் தீமையாகப் பரிணமிக்கிறதே ஆகையால் இரண்டுநாகரிகத்தார்களும் முறையே தத்தமக்குஉதவாதெனும்படி எஞ்சி நிற்கும் நற்குணங்களை இதரநாகரிகத்தாரோடு பகிர்ந்து கொள்ளுவரேயானால், தத்தம் குற்றங்கள் நீங்கிக் குணங்கள் விளங்கப்பெறுவார்கள். நாம் இப்போது இவ்வாறான நிலையிலிருக்கிறோம். இவ்விரு நாகரிகங்களும் ஒன்றுக்கொன்று நேர்எதிரான இரண்டு வழிகளில் சேர்ந்து வந்திருப்பது ஆச்சரியமாகவேயுள்ளது. பரஸ்பரம் இன்றியமையாததென்பதே இதனால் விளங்குகிறது.

இங்கிலாந்தை உதாரணமாகக் கொண்ட மேற்றிசை நாகரிகம் உலகில் இப்போது இவ்வளவு பிரபலமாய் விளங்குவதேனெனில், தன்னல மறுப்பும் பொது ஜன ஊழியமுமே இந்நாகரிகத்தில் முக்கிய லக்ஷணங்களாயிருத்தலால் தான் என்று வின்செஸ்டர் ஸ்தானத்தில் அத்தியக்ஷரான ஒரு கிறிஸ்தவ மதபோதகர் ஆராய்ந்து கூறினர். மேலெழுந்தவாறாகச் சரித்திரத்தைப் படித்தவர்கள், இதென்ன உண்மைக்கு முற்றும் மாறாக உள்ளதென வியப்பர்.



210793

பிறர்வழிக்குப் போகாமல் தன் காரிய[illegible] தானுண்டு என்றிருத்தலும் (ஸ்வகாரியப்புலியென்று இ[illegible]யே தவறாகக் கூறுவதுண்டு) திடமான விவேகமும், சமயோசித புத்தியும், இடைவிடாமுயற்சியும், சங்கங்களாக ஏகோபித்து உழைப்பதும், கண்டவைகளில் புத்தியைச் சிதறவிடாமல் நினைத்த காரியம் சித்திக்கும்வரை முயலுதலும் இக்குணங்கள் எல்லாம் ஆங்கில தேசவாஸிகளில் படித்தவர்களுக்குள் ஸர்வஸாதாரணமாய் விளங்குகின்றன. தத்துவவிசாரணையிலும், அத்யாத்மசிந்தனையிலும் நூற்றாண்டுகளாகப் பிரவர்த்தித்து, ஸூத்திரங்களையும் வ்யாக்கியானங்களையும் ஆராய்ந்து வந்த நம்மவர்க்கு அக்குணங்கள் யாவும் மெத்த அவசியமே. அத்துவைத பாவனையில் தேர்ந்த நம்மவர்க்கு ஸ்வகாரியமொன்றிருப்பதாகவே எண்ணமில்லை.

எல்லோருடைய காரியமும் நம் காரியமென்று கொண்டு ஒன்றுசேர்ந்த வாழ்க்கையில் ஆழ்ந்துபோய், நாம் தனித்துச் செய்து முடிக்க வேண்டியதைக் கவனிக்கிறதேயில்லை. பரமார்த்த சிந்தனையில் மிதமிஞ்சி, சாஸ்திரார்த்தங்களிலும் தருக்க விவசாரங்களிலும் சண்டையிட்டுவரும் நமக்கு, பயன் தரும் விவேகமாகிய ஸ்வயபுத்தி என்பது தொலைந்தது. தீவ்ரமான உழைப்புக்கு இடையூறுகளென்னவெனில் தேசத்தின் கடுமையான உஷ்ண ஸ்திதியொன்று, பூமியின் செழிப்பு மற்றொன்று, வருவதுதானேவரும், போவதுதானே போகும் என்ற தப்பான கொள்கை இன்னொன்று. ஏட்டுச்சுரைக்காயெனும்படியான பரலோக தத்துவ விசாரத்தில் நூற்றாண்டுகளாக விவகரித்துவந்த நமக்கு ஸங்கங்களின் மூலமாய் ஒருங்கே பிரவர்த்திப்பதும் அஸாத்தியமாயுள்ளது. செல்வநிலைமையில் இந்தியா பராதீனப்பட்டது முதல் விடாமுயற்சியும் ஒழிந்தது. மேற்கண்ட நற்குணங்களையெல்லாம் நாம் கடைப்பிடிப்போமாயின் நம் தேசம் எவ்வளவு மேன்மையடையும்!

இந்தியாவுக்கு சுயஆட்சி கிட்டின பிறகும், இங்கிலாந்துக்கு நம்தேசத்துடன் சேர்ந்திருப்பதில் என்ன பயன்? மேற்றிசை நாகரிகத்தார்களுள் முற்கூறிய நற்குணங்களையொட்டிய பல தோஷங்களும் உள்ளன. இந்தியர்களுடைய நற்குணங்களைக் கைக்கொண்டால்தான் அக்குறைபாடுகள் சரியாகும். வேலைத்திறமை, தன்னேக்கம், ஏகாக்ரதை, காரியஸித்தி, முறைப்படி ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளுக்குப் பணிந்து நடத்தல் இவற்றுள் அவர்கள் மிதமிஞ்சியதால் கல்நெஞ்சு என்ற துர்

குணம் வரலாயிற்று. நீட்ஷே என்ற ஜெர்மானிய தத்துவ சாஸ்திரியும் இவ்வுலக சரித்திரத்தில் மேன்மையடைவதெல்லாம் கடின சித்தம் ஒன்றினாலேயே யென்று சுருங்கக் கூறிவிட்டார். வின்செஸ்டர் பிஷப் என்ற அத்தியக்ஷர் மேனாட்டாரின் சுபாவத்தை நன்கெடுத்துக் கூறியிருப்பதில் இக் கடினசித்தமே அவர் அதிதுக்ககரமான வாழ்க்கைக்கு காரணமென்று சொல்லுகிறார். மேற்றிசை நாகரிகத்தில் எத்துணை நற்குணமிருப்பினும், அத்துடனேயே பரமதாரித்ரியமும், தொழிலாளிகளை இளைப்பாற வொட்டாமல் அநியாயக் கூலிக்கு வேலை வாங்குதலும், வியபிசாரத்தாலான சதகோடி வியாதிகளும், வயிற்றுப் பிழைப்புக்கும் பிறப்புரிமைகளுக்கும் போராடுவதும் இவை யாவும் உள்ளன. இவை யாவும் கடினசித்தத்தை யன்றி வேறெதைக் காட்டுகின்றன? மேற்றிசையோரின் இவ்வியாதிகட்கு பூர்விக நாகரிகத்தின் ஆத்தும ஞானத்தையும், தருமத்தையும், ஏகீபாவத்தையும், அத்யாத்ம சிந்தனையையும் தவிர வேறு மருந்தேது?

இவ்வாறு, நம்மவர் மிதமிஞ்சிய இளக்கத்தாலடைந்திருக்கும் கோழைத் தனத்தை யொழித்து, ஸாமர்த்தியம் பெறவும், மேனாட்டார் தம் வேலைத் திறத்தோடு அநுதாபத்தையும் பொறுமையையும் பெறவும், இரு நாகரிகங்களும் ஒன்றுபட வேண்டும்.

டாக்டர் பெஸண்டம்மையார் கூறுவதை எழுதி இதை முடிப்போம்:—

"நம் கண் முன் தோன்றும் அற்புதக் காட்சியைக் கூறுகிறேன் கேளுங்கள். வெண்கலை யுடுத்த தருமமும், நவமணி பொற் பணிச் செல்வமும், பற்பல சிறந்த மதங்களும், யந்திர தந்திரக்கலைகளும் ஒருங்கே அமைந்த முறையே இந்தியாவும் பிரிட்டனும் கைகோதது நின்று உலகின் நானா தேசங்களையும் உடனழைத்துச் செல்லும் ஊர்கோல வைபவம் என்னென்பேன்; சிரசில் அறிவெனும் வைரிய வலயங்கள் சூடிக் கைகளில் விநோத வாத்தியங்களும், பற்பல கைத்தொழிற் கருவிகளும் தரித்துச் செல்ல புவியின் மக்கள் புடைசூழ்ந்து பூமாரி பெய்ய விண்ணவர் மக்கள் தம் தூய உலகப் பசும் புற்றரையின் பசும்பொன் மலர்களை மழையாய் சொரிந்தனர்.

பழைய துக்கங்களை மறப்போம். பரஸ்பரம் அன்புபாராட்டுவோமாக. பரஸ்பரம் நம்பிக்கை விசுவாஸம் கொள்வோம். இருதிறத்தார்க்கும் பொதுவில் கிடைக்கும் இவ்வானந்த பதவியைப் பெறுவோம். எவரும் அதைத் தனியே யடையவொண்ணாது. இருவரும் சேர்ந்தே போவோம், இதுவரை உலகமறிந்திராத அம்மகிமையெய்துவோம். போனதைப் பற்றிச் சண்டைப் பிடித்துக் காலங்கழிக்கவேண்டாம் நாம் முன் சென்று, வருங்கால மேம்பாட்டைச் செய்வோம்."



---

# ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்.

---

நவம்பர் 1923 ஆறும் வாரம்.

## ஸோதரபாவம் (ராஜகீய முயற்சியில்.)

"தாயும் தாய்நாடும் ஸ்வர்க்கத்தினும் சிறந்தவை."—மநு.

ஓர் தேசத்தார்க்குள் ஸஹோதரதர்மத்தை விருத்திசெய்யச் சுதேசீய வுணர்ச்சியும் அபிமானமும் போன்ற சாதனம் வேறெதுவுமில்லை. பிரபஞ்ச நியதியை நாமறிந்தமட்டும், ஒவ்வொருவனும் தன் பரிபக்குவமுறையில் தன் தன் முன்னேற்றத்துக்குச் சாதகமான காலதேச வர்த்தமானங்களிற் பிறந்து வளர்ந்து அதனால் ஜீவாத்மாவினுள் அடங்கியிருக்கும் சக்திகளை யெல்லாம் தேர்ந்த சித்திகளாக்கிக்கொள்கிறான். ஒரே காலதேச வர்த்தமானங்களில் பிறப்பவர்கள் ஓர் பொதுக்காரியத்தி னிமித்தமே வருகிறார்களாகையால், தாமறியாமலே ஒன்று சேர்ந்து தாய் நாட்டை மேம்பாடடையச்செய்து, பல அரிய தியாகங்களைக் கைக்கொண்டு தேசாபிமானத்தை மேன்மேலும் வளர்க்கிறார்கள். ஒரே பாஷை, மதம், நடையுடைபாவனை, விதிநியமங்களாகிய சட்டங்கள் இவை எற்கெனவே மனிதரிடத்தாழ்ந்திருக்கும் சோதரவுணர்ச்சியைப் பலப்படுத்தும் வெளிச்சாதனங்களாகின்றன.

உறவு கலந்து வாழும் தன்மையன் மனிதன். ஆகையால் நாமெப்போதும் சௌகரியத்தையும் நாகரிகத்தையுமே நாடுகிறோம். நம் சுபாவத்தின் கோணல்கள் திருந்தப்பெற்று பட்டை செதுக்கின வயிரம்போல் பிரகாசிக்க விரும்புவோமாயின், பிறருடன்பழகி அநுபவத்தில் தேறல் வேண்டும். துறவெனும் நற்குணத்தைக் கைகொண்டால்தான் விடுதலையுண்டென்பதை யொவ்வொருவரும் தமக்குத் தாமே காலாந்தரத்தில் அறிந்து

கொள்வர்; "தியாகரூபமாய்ச் செய்யாத கருமம் எதுவும் உலகினரைக் கட்டுப்படுத்தும்" என்ற பகவத்கீதை III-9 வசனம் பொய்யல்ல வென்பதையுணர்வர்.

ஒவ்வொருவருடைய சுபாவத்திலும் இரண்டு வித அம்சங்கள் ஒன்றையொன்று மேற்கொள்ளப் பார்க்கின்றன. ஒன்று தன்னலமும், தன் முன்னேற்றமும் கருதல். மற்றொன்று பொதுஜன நலத்தையே கருதும் உத்தமகுணம். இது தான் ஈசுவரசங்கல்பத்தை யநுசரித்தது. முடிவில் இதே மேலோங்கும். எந்த ஜனஸமூஹத்திலும் ஒருவன் எவ்வளவு சுயநயமுள்ளவனெனிலும் ஒரு திவலையாவது பொது ஜன நன்மையில் உணர்ச்சியிராமற் போகான். உலகில் வேண்டியமட்டும் சுயநலம் மிகுந்திருப்பினும், மனித சுபாவத்தில் அத்தகைய தனித் தன்னலம் காணுதலரிது. அது மிருகங்களின் தர்மமேயன்றி மனிதருக்கல்ல.

சுயநலமுள்ள சாமானியர்க்கும், மனிதகோடிகளையோ தன் தேசத்தாரையோ எண்ணி தன் ஸகலத்தையும் துறந்த தியாகிக்கும் மத்தியில் பல படிகளில் பலவேறு தரமான சுயநயமும் உதாரத்துவமும் வாய்ந்தபலர் அமைந்திருக்கின்றனர். கல்வியறிவொழுக்கங்களில் உயர்படிகளிலுள்ளவர்களால் தான் தேசீயவாழ்க்கை நடந்தேறிவருகிறது. சட்டசபைமெம்பர்கள் நியாயாதிகாரிகள் முதலிய அரசாங்க உத்தியோகஸ்தர் தான் மற்றவர்களை விட பரக்ஷேம இச்சையுடைவர்கள் என்பதல்ல. தத்துவ முறையிற் பார்க்குங்கால் "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற வாக்கியத்தின்படி உயர்ந்தோர் நடபடிக்கையும் ஸம்பிரதாயங்களுமே காலாந்தரத்திற் பொது ஜனங்களின் மநத்திற் சார்ந்து பிரமாணங்களாக நிலைபெறுகின்றன. அவைகளை யெல்லோரும் கட்டுப்பாடாய்க் கீழ்ப்பணிந்து அநுசரிக்க ஆரம்பித்து, அப்படி அநுசரிப்பவர்களெல்லோரும் ஒன்று எனப்பாவிப்பதனால் ஸஹோதரத்துவம் தேசத்தில் விருத்தியாகிறது.

ஆனால் முதன்முதல் இச்சட்டங்களைப் பிரமாணமாகக் கொண்டு மநப்பூர்வமாய்க கட்டுப்பட்டு நடப்பவர் சிலரே. பஹுஜனங்கள் தண்டனைக்கும் ஏளனத்துக்கும் பயந்து தான் கீழ்ப்படிவார்கள். பொது ஜன ஊழியத்தில் எவரெவர்க்கு நாட்ட முண்டோ அவர்களே ஸ்வேச்சையை அநுபவிப்பர், மற்றவர்கள் தர்மத்துக்கும் தடையாயிருப்பர். தாங்களும் ஸ்வேச்சையை உணராமல் வெளி நிர்ப்பந்தத்துக்காக



நடப்பர். ஆனால் சில காலம் இப்படிச்செல்ல, கடைசியில் பொது ஜனங்கள் எல்லோரும் ஸர்வஸாதாரணமாய் இச் சட்டங்களை யநுசரித்தலும் நிலையாக ஏற்படும். ஆனால் ஓர் ஜன ஸமுதாயம் முன்னுக்கு வரவேண்டு மானால், அதன் அங்கங்களாகிய ஒவ்வொருவரும் எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகத்தோடு மேன்மேலும் ஒற்றுமை யுணர்வைக் கைக் கொண்டு பெரியோர்களின் நன் மாதிரியைத் தாமஸமின்றி கடைப் பிடிக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அது எளிதில் கூடும். துரும்பிலும், தூணிலும், பிண்டத்திலும் அண்டத்திலும் ஒரே தன்மையாய் விளங்குவது ஈசனுடைய உயிர் என்பதை நினைந்து எவன் ஒருவன் பொது ஜன நலத்துக்கு உழைப்பானோ அவனே தன் நிரந்தரமான சுகங்களைத் தேடிக் கொள்பவனாவன்.

ஓர் தனிமனிதனிடம் எப்படியோ அப்படியே ஓர் ஜனத்தொகுதியிலும் ஈசுவராம்சங்களுள்ளன. அவற்றை விரைந்து தேடிக் கண்டு கொள்பவனே, "ஸகலத்தையும் புதுப்பிக்கும் படியான பரம சக்தியைப் பெறுவான்."

ஸாதாரணமாக சுய நலத்தில் பிரவர்த்தி யுடையவர்கள் படிப்படியாய்ப் பரார்த்தத்தில் ஏற்படுவதற்கு ராஜகீய முயற்சி எவ்வளவோ சிறந்த வுதவியாயிருக்கிறது. அதனால் ஒவ்வொருவரும் நகர வாஸியின் லக்ஷணங்கள் யாவையும் தம் சுபாவத்தில் அமையப் பெறுகிறார்கள். உதாரணமாகச் சாமானியன் சும்மாவிருக்க விரும்புவதை யொழித்து, சுறுசுறுப்பாய் உழைக்கத் தொடங்குகிறான். முரட்டுத்தனமாய் யாவர்க்கும் கட்டுக் கடங்காமல் தான் தோன்றியாய்த் திரிந்து கலகத்தை யுண்டுபண்ணுபவன் முறைப்படி ஏற்பட்ட அதிகாரிகளுக்கு அடங்கி நடக்கும் வழக்கத்தில் வருகிறான். விவேகம், சாமர்த்தியம், சமயோசிதபுத்தி இப்படிப்பட்ட குணங்கள், ஸ்வாதீனமாயுள்ள இதர தேசங்களில் இருக்கும் நகரவாசிகளை யொப்ப நமக்கும் ஏற்படுகின்றன. இம்மூன்று அம்சங்களான குணங்களையுடைய ஒருவனுக்குப் பிறரைப்பற்றி எண்ணுவதே அதிகமாகவும் தன்னைப்பற்றிச் சிந்திப்பது அற்பமாகவும் இருக்கும். ஸஹோதரபாவத்துக்கு இதுதான் வழி.

இக்குணங்களையடையுமொருவன் அடுத்தபடியாக உலகில் எத்தேசத்திற்கும் பாரபக்ஷமில்லாத ஓர் பொது ஆளாக உழைக்க யத்தனிக்கும்போது, ஸர்வதேசங்களிலுமுள்ள ஸர்வ

ஜனங்களும் ஸஹோதரர்களே என்ற ஒற்றுமையுணர்வை அடைகிறான். இவ்வாறான ஸர்வஜன ஸஹோதரபாவத்தைக் கைக்கொள்கிறவன் இக்காலத்திய ராஜகீயப் பிரவர்த்திகளிற் காணப்படும் அற்பச்சண்டைகளிலும் கக்ஷிகளிலும் தலையிட மாட்டான். இத்தகைய ஸர்வஜன ஸஹோதரபாவத்தை யடைந்து ஆனந்தித்தல் ராஜகீய முயற்சியால்தான் கூடும்.

---

## ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்.

---

நவம்பர் 1923 7ஆம்வாரம்

### ஸஹோதரபாவம் (மாணவர்களுள்).

"மதலைக்குண்டு சொர்க்க இன்பம்"

ஒவ்வொருவரும் முற்பிறப்பின் பயனான சக்திகளுடனும் சித்திகளுடனும் கூடியே பிறக்கிறார் என்பதை ஸாதாரணமாக யாரும் சொல்லக் கேட்கிறோம். இத்தகைமைகளும் திறமைகளும் நாம் பிறந்தவுடனேயே இருப்பினும், பிறகு வளரவளரத்தான் சாவகாசமாய் மலர்ச்சியடைகின்றன. ஜீவர்கள் சொர்க்கத்திலிருந்தே இப்புவியில் தோன்றுகிறார்களாகையால், குழந்தைப்பருவத்தில் சொர்க்கானுபவ ஞாபகம் எப்போதுமிருக்கும். ஆகையால் அவர்கள் களங்கமற்றவர்களாயிருக்கின்றனர். பிறகு தான் அவர்களுடைய நற்குணம் பூலோக வாஸனையால் வரவர மழுங்க ஆரம்பிக்கிறது. ஒருவன் தன் இளம்பருவத்தில் தனக்கு சுற்றத்தார் அயலார்களிடமிருந்து குணதோஷங்களை எளிதிற் கிரகிக்கிறான். மேலும் சிசுப்பருவத்திலும் வாலிபத்திலுந்தான் ஜீவர்கள் தம் பிரதாபங்களையும், மனோரதங்களையும், பாவனைகளையும், உயர்லக்ஷ்யங்களையும் நாடுகிறார்கள். தாமே ஞானமுள்ளவராக நினைக்கும் முதியோர்கள் அதைப்பரிகசிக்கிறார்கள். இவர்கள் தம் அறிவீனத்தால் குழந்தைகளின் உயர் நோக்கத்தின் யதார்த்த மேன்மையை உணரமாட்டாமல், தம் சோற்றுக் கவலையையும் தம் துக்கத்தையும் அவர்களுக்குச் சொல்லி மனிதருடைய சுயநலபுத்தியையும், அற்ப சுபாவத்தையும் ஊட்டுவதே அவர்களை அநுபவம் பெறச்செய்யும் வழியாக நினைக்கிறார்கள். பார்க்குமளவில், விஷயம் தெரிந்த முதியோர்களென்கிறோமே,



அவர்களே குழந்தைகளுக்கு நண்பர்களாயிருப்பதாக எண்ணிக்கொண்டு, நல்லெண்ணத்துடனேயே அறிவின்மையால் தீங்கு செய்கின்றனர். அறிவின்மை நிறைந்த இம்மித்திரர்களிடருந்து குழந்தைகளை ரக்ஷித்தல் தான் வேண்டும். கல்விபயிற்றுவோர்கள் இக்காலத்தில் அநுஷ்டிக்கும் முறையைக் கேளுங்கள். குழந்தைகள் தாமாகப் பிரவர்த்திக்கும் எவ்விளையாட்டிலும், காரியத்திலும், படிப்பிலும், நாம் தலையிடாமல் அவர்கள் போகும் வழி எதுவும் நிச்சயம் அபாயகரமானால் மட்டும், அவர்கட்குப் புத்திசொல்லி அழைத்து வருவதே முறை. நம் பூர்வ அநுபவத்தைக்கொண்டு குழந்தைகளை நல்வழியில் நடத்துவது நம் கடமையே யெனினும், எவ்விதத்திலும் அவர்களை வலுவந்தப் படுத்துதல் உதவாது. சரி, எல்லாவற்றையும் குழந்தைகள் தாமே தெரிந்து கொள்ளட்டும், யாம் ஒன்றிலும் பிரவர்த்திப்பதில்லைஎன்பீராகில், அதுவும் மதியீனம். ஏனெனில் அவர்கள்எதையும் மறுபடி அடிப்படையிலிருந்து தொடங்க வேண்டிவரும். அப்படியானால், முன்னோர்களின் அனுபவத்தினால்தான் என்ன பயன்! அப்படியாயின் உலகமுன்னேற்றம் தடைப்படுமன்றோ? ஆகையால் விவேகமும் உணர்வுங்கொண்டு குழந்தைகளைப் பயிற்றல் வேண்டும்.

ஜீவர்களின் ஈசுவரத்தன்மையையும், ஆத்மபரிபாக மார்க்கத்தையும், கர்மம், புநர்ஜன்மம் என்னும் நியதிகளையும் உபாத்தியாயர்கள் உணர்வரேயானால் பள்ளிக்கூடங்களெல்லாம் பிள்ளைகளுக்கு நிர்ப்பந்தமாகத்தோன்றா. மேலும் பள்ளிக்கூடங்களே அவர்கட்குச் சௌகரியமான இடமாயிருக்கும். இத்தத்துவங்களை நாம் ஏற்றுக்கொள்ளாமலும் தீரவில்லை. குழந்தைகளின் ஸ்வேச்சையை நம்பிவிடவும் முடியவில்லை. உண்மையில் இத்தத்துவங்களை நாம் நம்புவதாகச் சொல்கிறோமேயன்றி, அவைகளில் நமக்கு மனப்பூர்வமான நம்பிக்கை இல்லை. இதன் மர்மத்தை மனத்தத்துவசாஸ்திரியே நமக்கு ஆராய்ந்து அறிவித்தல் கூடும்.

சமீபகாலத்தில் இவ்விஷயமாகப் பெருமுயற்சி செய்து வரப்பெற்றாலும், இன்னும் நிறைவேற்றவேண்டிய அபார வேலையை உத்தேசிக்க, அது சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததுபோலிருக்கிறது. வளர்ச்சியடைந்த சிறுவர்களை ஓடியாடி விளையாடவிட்டுப் பார்ப்பது நன்றோ? எப்போதும் தொட்டிலில்விட்டுப் பாலடைகொண்டு பால்புகட்டுவது நன்றோ? ஒவ்வொரு சிறு காரியத்திலும் குழந்தைகளை நிர்ப்பந்திக்கா

மல், அவர்கள் தமக்குத்தோன்றியவாறு சொந்த சக்தியை உபயோகித்து தாராளமாய்த் தங்காரியங்களைச்செய்து அனுபவம் பெற இடம்கொடுத்தல் வேண்டும். சென்ற சில வருஷங்களுக்குள் ஏராளமான கிரந்தங்கள் இது விஷயமாய் வெளிவந்துள்ளன. அவற்றிற்கூறிய கொள்கைகளைத் தினசரி, பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயமார் அனுசரித்தல்தான் வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் தமக்குள் ஒருவர்க்கொருவர் சோதரவுணர்ச்சியுடன் ஒழுகுவர். குழந்தைகளிடம் சிறந்த குணம் எதுவும் உதிக்கவொட்டாமலடிக்கும் கம்பீரசன்னியுடைய முதியோர்கள் நல்லெண்ணத்தினராயிருந்தே காரியத்தைக் கெடுக்கிறார்கள்.

ஒற்றர் (ஸ்கௌட்) சங்கம் இதற்கோருதாரணம். அதனால் மாணவர்களுள் சோதரபாவம் வளரும் என்று அதைச் சனங்கள் நன்கு மதிக்கிறார்கள். ஏன்? அதனால் உயர் லக்ஷியங்கள் வற்புறுத்தப்படுகின்றன. சிறுவர் சிறுமியர் அவற்றைக்கடைசிவரை கைக்கொண்டு நடப்பர். ஆகையால் இச்சங்கம் சிறுவர் சிறுமியர்க்கேற்பட்டதேயன்றி முதியோர்களுக்கல்ல.

மேலும் இச்சங்கத்தில் முதியோர்களின் மேற்பார்வையால் நிர்ப்பந்தமில்லை. அங்கத்தினர் ஒவ்வொருவரும் தாம்தாமே வலியச்சென்று உபகரிக்கின்ற குணத்தவர் ஆகிறார். அவர்கள் பெருந்தன்மையையும் நாகரிகத்தையும் வேஷமாத்ரமாக அனுஷ்டியார். ஏனெனில் அவர்கள் விசேஷமான ராஜபக்தியும், தேசபக்தியும், ஈசுவரபக்தியும் அமைந்து விளங்குவதோடு தங்கள் சங்கத்து யஜமானருக்கும், சங்கத்துச் சட்டத்துக்கும் கீழ்ப்படிந்தும் நடக்கிறார்கள். ஏறக்குறைய சமவயது, சமமனதுடைய தன்னைப்போலொத்த பிள்ளைகளுள்ள இச்சங்கத்திற்சேர்வதில் மாணவன் எவனும் பிறருடன் சோதரபாவத்தையே பாராட்டுவான். இவ்வாறு ராஜபக்தியுடன் தாராளமாயம் அந்யோந்யமாயும் கலந்துறவாடும் வாலிப ஒற்றர் சங்கத்தின் வருங்கால மஹிமையை என்னென்றுதான் சொல்வது! அஃதேனெனில் ஒற்றன் ஒவ்வொருவனும் தன் கண்யதையைக் கைவிடாதவன். குழந்தைகளை வருங்காலத்தில் நல்ல ஸ்திரீபுமான்களாக்குவதில் இச்சங்கத்தை விடச்சிறந்த ஸாதனம் இல்லை. மனிதரிடத்துண்டாகக் கூடிய குரூரத் தன்மையையும் அற்பத்தன்மையையும் இச்சங்கம் எளிதில் அகற்றுகிறது. ஒற்றர்கள் தாமே ஒருங்கேபோய்



ஓரோரிடத்தில் முகாம் கூடுகின்றனர். அயல்நாட்டார்களுடன் நன்கு பழகி சினேகபாவத்தை விருத்தி செய்கிறார்கள். முதியோர்களின் ஸஹோதர ஐக்கியத்தை விட மாணவர்களின் ஸஹோதர ஐக்கியம் விசேஷ வீரியமுடையது. எப்படியெனில் சிறுவர் சிறுமியர் தமக்குள்ளே சுய லாபங் கருதிப் பழகுவதில்லை. வாலிபத்தில் செய்யும் சிநேகத்திலேயே மிகுந்த சந்தோஷமுண்டு. ஏனெனில் மாசற்ற ஆனந்தத்தினாலேயே அவர்கள் சினேக முறையில் ஐக்கியப்படுகிறார்கள். ஆகையால் முதியோர்களாகிய நாம் தான் உலக வாழ்க்கையால் கவலை ஆசாபாசங்களில் அழுந்திப் போனாலும் சிறுவர் சிறுமியர்களாவது தமக்குள்ளே சங்கங்களாகச் சேர்ந்து உயர் லக்ஷியங்களை சிந்தித்தும், மனோராஜ்யங்களைச் செய்தும், ஸல்லாபமாகப் பழகியும் நம் காலத்திற்குரிய நல் நிலைமைகளை இப்போது முதலே சீர்திருத்திக் கொண்டு சுகமடைவார்களாக.

---

## ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்-

நவம்பர் 1923 8-ஆம்வாரம்.

### ஸர்வ ஜீவஸஹோதரத்துவம்

“ஆத்மவித்தையைக் கைக்கொண்டவன் ஸர்வஜனோபகாரமாக வாழ்வது மட்டும் போதாது. எவ்வுயிரையும் தன்னுயிராகவே பாவித்துவாழவேண்டும்” இவ்வாறாக டாக்டர் அன்னைவஸந்தை அவர்கள் “உயர்வாழ்வின் விதிகள்” என்ற நூலில் கூறியிருக்கிறார். இவ்வாக்கியத்தால் தான் சில வருடங்கட்கு முன் ஆலோசிக்கத்தொடங்கினேன். கீழான உயிர்களிடத்து எவ்வாறு சோதரத்துவங் கொண்டொழுகுவது என்பதை இதனால் தெரிந்து கொண்டேன்.

அன்னையவர்கள் பின்னுங்கூறுவதைக் கேளுங்கள். “ஆங்கிலேய வீடுகளின் வழக்கப்படி என் குழந்தைப் பருவத்தில் எங்கள் வீட்டில் விளையாட்டுக்காக ஆப்தமான பலவிதப் பிராணிகளை வைத்துக் கொண்டிருந்தோம். அப்போது அவைகளுடன் நான் நெருங்கிப் பழகச் சமயம் வாய்த்தபடியால், அவைகளின் ஸ்வபாவங்கள், குணம், வழக்கங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து படித்தேன், இப்பிராணிகளில் ஏதேனுமொன்றிறக்குமாயின், புநர்ஜன்ம உண்மையை மறந்த இக்கா

லக் கிறிஸ்தவமதத்தில் ஒவ்வொரு சிறுவர்க்கும் ஏற்படக்கூடிய சமுசயமென்னவெனில்: அன்பும் விசுவாஸமும் பாராட்டிய இப்பிராணிகளையே, மறுபடி என்றைக்காவது நாம் எங்காவது அடைதல் கூடுமோ? என்பதேயாம். கிறிஸ்தவ வைதிகர்கள் அஸாத்தியம் என்பார்கள். இதனால் தான் என் மநம் சங்கடப்பட்டது. நானோ பிராணிகளிடம் மிகுந்த சினேகமாயிருந்தமையால், கடவுள் என்ன இவ்வளவு கொடுமையும் கல்நெஞ்சும் உடையவரா? என வியந்தேன். இன்னும் சற்றுயோசிக்கும் போது "ஜீவனும் சைதந்யமும் இயங்கும் எல்லாம் நாமேயென பாவித்தல் வேண்டும்" என்பதைத் தெரிந்து கொண்டேன். இதில் தான் இரகசியம் உள்ள தெனவும் இதைப் பயின்றால் உண்மைவெளிப்படுமென்றும் கொண்டேன்.

ஆனால் இதைப் பயிலல் எளிதல்ல. உலகமுழுதையும் பாருங்கள். யார் எங்கே அப்பியஸிக்கிறார்கள்? சிற்சில பிராணிகளைச் செல்லப்பிள்ளைகளைப்போல் ஆங்காங்கு பலர் வளர்க்கிறார்கள். எவ்வுயிரையும் இவ்வாறு பாவிக்கிறவர்கள் எங்கிருக்கிறார்கள்? பெரும்பான்மையோர் தத்தமக்குச் சிற்சில நன்மைகளைக் கருதியே பிராணிகளைச் செல்லமாய் வளர்க்கிறார்கள். அன்றி எவ்வுயிர்க்கும் மித்திரராய் விளங்குவதில்லை.

யுதிஷ்டிரரையும் அவருடைய நாயையும் பற்றிய கதை இங்கு கவனிக்கத் தக்கது. தேவேந்திரன் விமானத்தைக் கொணர்ந்து, யுதிஷ்டிரரே! ஏறும், ஸ்வர்க்கத்திற்குப் போகலாம் என்றான். அவரோ, தம் நாயைக் காட்டி, மிகச் சிரமப்பட்டுப் பாலைவனத்தைத் தாண்டி வந்திருக்கும் இச் சந்துவுக்கு நான் மிகவு மிரங்குகிறேன். அதுவும் என்னுடன் வரட்டும் என்றார். நாய்களுக்கு ஸ்வர்க்கத்திலிடமில்லை என்றான் இந்திரன். மறுபடியும் யுதிஷ்டிரர் தான் நாயை விட்டு வரல் முடியாதென மறுக்கவே, இந்திரன் அவரைப் பார்த்து, உன் சோதரரெல்லாரும் பாலைவனத்திலிறக்க நேர்ந்ததைச் சகித்தாய், நாயினிடத்தேன் இவ்வளவு பற்று? அதை முன்னேற்ற விரும்புகிறாயே! எனப்பரிகசித்தான். இறந்துபோன என் மனைவிக்கும் சோதரர்கட்கும் நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இந்த நாயோ உயிருடனிருக்கிறது. அடைக்கலம் புகுந்த அநாதையை அநாதரவு செய்தல், பூசனைக்குரிய பிராஹ்மணனைக் * கொன்ற பாபமாகும். வணங்கு

* பிரஹ்ம பாவனையில் முதிர்ந்த பிரஹ்மஜ்ஞானியென்றருத்தமேயன்றி, சாதிப் பிராமணனென்ற கருத்தல்ல.



தற்குரிய பிராஹ்மணனின் சொத்துக்களை அபகரித்த பாபமாகும். நான் மட்டும் தனியே ஸ்வர்க்கத்திற்கு வரமாட்டேன் என்றார். தான் பட்ட சிரமத்திற்கெல்லாம் துணையாயிருந்த நாயின்றித் தான் தனியே ஸ்வர்க்க சுகத்தை அநுபவிக்க மாட்டேனென்ற யுதிஷ்டிரருடைய நடத்தையால், நாம் எவ்வாறு பிறவுயிரோம்புதல் வேண்டும் என்பதை இனிதுணருகிறோம்.

புத்தபகவானுடைய அபாரகருணையைப்பற்றியும் ஓர் விசேஷமான கதையுண்டு. அதாவது ஓர் சமயம் ஓர் இடையன் ஓர் நொண்டி ஆட்டுக் குட்டியைக் கவனியாமல் தன் மந்தையை ஓட்டிப் போகையில், தாய் மறி துக்கந் தாங்காதது கண்ட புத்தபகவான், குட்டியைத் தன் கரங்களில் தாங்கி அதன் தாயிடம் காட்டித் தாயே கவலைப்படாதே உன் குழந்தையை நானே சுமந்து வருகிறேன் என்று அதைச் சுமந்து உடன் சென்றனராம். உலகத் துன்பங்களையெல்லாம் கவனித்துக்கொண்டு இக்குகைகளிற் சும்மா இருக்கும் ஸந்யாஸிகளைப்போலின்றி ஒரு பிராணியின் துக்கத்தையாவது ஆற்றுதல் நன்றன்றோ? எனச்சொல்லிக்கொண்டே போகையிற் கடைசியில் அத்தனை ஆடுகளையும் ஓர் யாகசாலையில் நிறுத்தினான். இடையன் ஆடுகளைப் பலியிடப்போகிறார்களென்றறிந்த புத்தர் யஜமானனைப்பார்த்து, அரசே! அவன் ஓங்கின கத்தியை நிறுத்தட்டும்! என்னவே யாவரும் திடுக்கிட்டு நின்றனர். அம்மஹானுக்கு யார்தான் அட்டிசொல்லக்கூடும்? "உயிரை வாங்குவது எளிது, உயிரைக்கொடுப்பது முடியாது. ஒவ்வொரு பிராணிக்கும் அதனதன் உயிர் அததற்கு அருமையன்றோ?" என்றார். பின்னும் புத்தர் தம் பிரயாணங்களில் ஓர் சமயம், பசியால் மெலிந்து கண் புதைந்து நாவுலர்ந்து கன்னங்குழிந்து, உடல் சுருங்கி விலாவெலும்பெடுத்த புலியொன்று பூனைபோல் வற்றி வரண்ட தன் இரு குட்டிகளுடன் எதிரே வரக்கண்டார். இவைகள் இக்காட்டில் கொலைபாதகப் பிராணிகளே எனினும் இன்றிருக்கும் இளைப்பை நோக்க நாளைக்காலையினுள் மாமிசமின்மையால் இறந்துபோகும்போலிருக்கின்றனவே. இவற்றைப் பிழைப்பிக்க ஒரே உபாயம்தான் உள்ளது. நான் இவற்றிற்கு இரையாகி நான் இறந்தாலும், அன்பு அழியாதன்றோ! அன்பானகாரியம் செய்து அன்பு அழிவுறுவது எங்காகிலும் உண்டோ? என்று சொல்லிக்கொண்டே தம் சரீரத்தைத் தியாகம் செய்தார்.

‘ஸர்வபூதங்களையும் தம்மைப்போலவே பாவித்தல்’ என்பதற்கு இவரே லக்ஷியம். கிறிஸ்தவமத கிரந்தத்திலும் “ துக்காணிக்கிரு தூக்கணங்குருவிகள் வாங்குகிறீர்களே. உங்கள் பரமபிதா அவைகளின்மேல் திருவுளம்பற்றாமலா அவை இவ்வுலகிற் பிறந்திருக்கின்றன !”—மத்தேயு 10-ம் அத். 29-ஆம் வசனம்.

இப்பழம் புராணங்கள் எதற்கு என்பர் சிலர். இவைகளே எனக்கு மிகவும் சந்தேகங்களைத் தெளிவிக்கின்றன ! அக்குருவியின் உயிர் அற்பமெனில், கடவுள் அதையொருவேலையாகச் சித்தத்திற்கொண்டு படைத்திருப்பாரா ? புத்தபகவான் எப்படிப்புலி வேறு தான் வேறென்று நினைக்கவில்லையோ, அப்படியேதான் கடவுளும் அக்குருவியிற் குருவியாய் நின்று விளங்குகிறார். நம் மனிதவர்க்கத்திற்கு மூத்த ஸஹோதரர்களான மஹான்களுடன் ஒன்றாக விரும்புவோமானால், நாம் கீழான வர்க்கங்களிலும் எவ்வுயிரையும் நம்முயிர்போலவே கருதி ஒற்றுமையுணர்வுபெறவேண்டும். நாம் எப்போதும் பேதபுத்தியை அடையவேண்டியதில்லையென்பது இதனால் யாவர்க்கும் தெளிவாகிறது.

பரன் ஜோன்ஸ் அவர்கள் பிரபஞ்ச ஸ்ருஷ்டியையும் ஜீவவிகாஸ முறையையும் சித்திரித்துக்காட்டியதில், ஒவ்வொரு ஜீவராசியிலிருந்தும் மற்றொரு ஜீவராசி வளர்ந்து விருத்தியாகிவரும் எழு அண்டங்களைக் காண்போர் எவரும் எல்லாவுயிர்களும் உண்மையில் ஒன்றே என்பதை எளிதிலுணர்வர்.

நம் பேதபுத்தியால் விகாஸமுறை என்னும் சக்ரத்தில் தடைகளாக குறுக்கிடுவோர்கள் நாமாகிறோம். மிருகங்கள் வேறென்றும், செடிகொடிகள் வேறென்றும் எண்ணுகிறோம். நம் வாழ்க்கையும் ஒரேநாளில் மலர்ந்துவாடும் பூவினையொத்ததுதானே !

இயற்கைப் படைப்பில் அபிமானமுள்ளவன் எவனும் வளர்பொருள் எவற்றினும் தன்னையுமுள்பட ஒற்றுமையே காண்பான். மிருகங்களிடத்தும், செடிகொடி, விருக்ஷஜாதியிலும் பலர் ஒற்றுமையைக் காண்பரேயெனினும் இரத்தினக் கற்கள் முதலிய தாதுப்பொருட்களுடனும் தாம் ஒன்றெனப் பாவிக்கிறவர்கள் அபூர்வம். நாம் கடவுளோடு ஒத்துழைத்து, அவர் வழி நிற்போராக வேண்டுவோமாயின். எதனிடமெல்லாம் ஜீவனும் வளர்ச்சியுமுள்ளனவோ, அதை யெல்லாம் நம்மோடொன்றென வுணரல் வேண்டும். கல்லினிடத்தும் மூற்



காலசம்பவங்களெல்லாம் ஸம்ஸ்கார ரூபமாய்ப் பதிந்து கிடக்கின்றதை ஸூக்ஷ்மதரிசிகள் பார்த்துச் சரித்திரம் எழுதுகின்றனரென்றால், பண்டையநாள் இரகசியங்களைத் தன்னிடத்தே ஒளித்துக்கொள்ளும் சக்தி அதற்கு உண்டென்பதா இல்லையென்பதா ? புஷ்பச்செடிகளுக்கு நாம் தண்ணீர் ஊற்றி உரம்போடும்போதே அன்பையும் ஊற்றுவோமாயின், அவை அதற்கேற்றபடி செழிக்கின்றன.

பகையானது எப்படிப்பட்டவர்களையும் பிரித்துவைப்பதுபோல அன்பானது எப்படிப்பட்டவரையும் இணைத்து வைக்கும். அன்பினால் எவற்றையும் அணுகலாம், எவற்றையும் அறியலாம். அன்பே தருமத்தின் ஆதியும் அந்தமுமாம். அதனால் யாதொரு தீங்கும் விளையாதாகையால், தர்மம் நிறைவேறுவது அதனாலேயே.

அன்பும் சிவமும் இரண்டென்பரறிவிலார்
அன்பே சிவமாவது ஆரு மறிகிலார்
அன்பே சிவமாவது ஆரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.—திருமூலர்.

நம்மினும் கீழ்ப்படிகளிலுள்ள சீவவர்க்கங்களுக்கு கெடுதல் புரிந்துவருமளவும் நாம் ஒற்றுமை பாராட்டி வருவதாகச் சற்றும் சொல்லிக்கொள்ளல் முடியாது அசாக்ரதையாலும், யோசனையும் இரக்கமும் இன்மையாலும் குரூரசுபாவத்தாலும் நாம் தீயன செய்கிறோம். சற்றேனும் காலார உலாவ முடியாமல் குதிரைமுதலியவற்றைக் கட்டிப்போடுதலும், அவைகள் சௌகரியமாய் நிற்கவும் மாட்டாமல் வாயை ஒரு பக்கமும் பின்னங்கால்களை ஒருபக்கமுமாக இறுகக் கட்டிப்போடுவதும் பாபங்களல்லவா ? அவற்றின் நோய்களையும் புண்களையும் கவனிக்காமல் வேலைவாங்குவதும் சரியான தீனிபோடாததும் பாபங்களல்லவா ? இவற்றையெல்லாம் நாம் ஒழிக்கவேண்டாமா ? நமக்குச் சோதரபாவமுண்டானால் எவற்றின் துன்பத்தையும் நம்முடையதாகவே எண்ணி அகற்ற முயலவேண்டும்.

நம்குறைகளைத் தீர்த்துக்கொள்ளப் பிறருதவியை நாமெதிர்பார்க்கிறோம். நாம் அதை மற்றைய ஜீவஜந்துக்களுக்குச் செய்கிறோமா ?

யாம் உம்முடைய சோதரரல்லவாவென்று கெஞ்சிப் பிறரிடமிருந்து, உடல்பொருளாவி மூன்றாலும் உதவிபெறுகிறோம். நமக்குக் கீழ்ப்படிகளிலுள்ள ஜீவராசிகளுக்கு நாம் அவ்வாறு உதவுகிறோமா ?

அகில உயிர்களும் கடவுளின் அம்சங்களாகையால் அவற்றையெல்லாம் ஒன்றெனத் தெரிந்து கொள்ளும் பக்குவ காலத்தை அடைதல் முயற்சியால் கூடும். மேற்கூறிய யுதிஷ்டிரர், புத்தர் கதைகளால் நமக்கு விளங்குவது இதுவே யாம். இவ்வுலகில் நம்மைவிட வேறான ஒன்று இருப்பதாக எண்ணும் வரையில், ஸர்வத்ர ஸோதரபாவத்தை எய்தினவர்களாகோம். நம் பிரேமைப் பிரவாகம் தங்கு தடை யின்றி எவ்வுயிர்க்கும் செல்லல் வேண்டும். ஜாதி மத வர்ண பேதங்களை யொருவர் ஒழித்தாலும் இவ்வகண்ட ஏகரஸத்தை யெய்துதல் இன்னும் உயர்வானது, சிரம ஸாத்தியமுமாம். கடவுளுடைய சிற்றில் ஆகிய இப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகளனைத்தும் அவர் குடும்பமே யாகையால், அக் குடும்பத்தில் நாம் எவ்வுயிரிடத்தும் அன்பு பாராட்டிச் சோதர முறையில் வாழாவிடில் அவருடைய ஸாந்நித்தியத்தை உணரமாட்டோம்.

இப்போதைய நிலையில் எல்லாப் பிராணிகளும் பக்ஷிகளும் நம்மைக் கண்டு பயப்படுகின்றனவே ஏன்? இதனால் மனித வர்க்கத்தாராகிய நாம் கீழான ஜீவராசிகளை எப்படி நடத்தி வருகிறோமென்பதை நன்கு உணர்கிறோம். நம்மைக் கண்டு எப்பிராணியும் பயப்படாதபடி நடந்து கொள்வது தான் சோதர பாவத்தைக் கடைப் பிடிக்க வேண்டிய நம்மவர் கடமை. அன்பு எங்குண்டு பயமங்கில்லை.

---

## நமது கிருகங்கள்—தெருக்கள்—நகர்கள்

1. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் தமது அனுபவத்திலுணர்ந்த விஷயம். ஆயினும் நமது நாடு நகரங்களும் வீடுகளும் தற்போதுள்ள நிலைமையை நோக்குங்கால் ஆங்கு நோயற்ற வாழ்வு வாழ்தல் என்பது ஏறக்குறைய அசாத்தியமென்றே நாம் நினைக்க வேண்டியிருக்கின்றது. நமது நகரங்களையும் பட்டணங்களையும், கிராமங்களையும் புதிய முறையில் அமைத்தலவசியம், இன்றேல் ஜனங்களுடைய ஆரோக்கியம் மிகவும் குறைவுபட்டு, நாம் தடுக்கக்கூடிய வியாதிகளும் மரணங்களும் எண்ணிறந்தனவாகப் பெருகிவிடும். நவீன வுலகிலெங்குமே (Housing Reform) "வீடுகள் சம்பந்தமான சீர்திருத்தம்" என்ற கிளர்ச்சி தோன்றியுள்ளது. சதுப்பு நிலமில்லாத மேட்டுப்பாங்கான



பூமியில் போதியவளவு காற்றும் வெளிச்சமும் உள் நுழையு மாறு இனி அமைக்கப்பெறும் கிருகங்கள் கட்டப்படவேண் டும் அவை அழகிய சோலைகளாலும் தோட்டங்களாலும் சூழப்பெற்று நவீன சுகாதார வசதிகள் பலவும் வாய்ந்தன வாயிருத்தல்வேண்டும். வீட்டினுள் பற்பல வேலைகளுக் கெனப் பிரத்தியேகமாம் அறைகள் ஏற்படவும் வேண்டும். அன்றியும் நமது நகரங்களில் புழுதி நிறைந்து அழுக்குப் படிந்த சிறு ரஸ்தாக்களும் பாதைகளும் சந்துகளும் இரா தொழிந்து திவ்யமங்களமான பெரும்பாட்டைகள் ஏற்படுதல் வேண்டும்.

2. மேற்குறித்த விஷயங்களே 'Housing Reform and Town Planning' என்ற நூதனக்கிளர்ச்சியின் கருத்தெனத் தோன்றுகின்றது. இவையனைத்தும் கனவெனச் சிலருக்குத் தோன்றலாம். அஃது அப்படியல்ல. தற்போதுகூட நகர நிர்மாண சாஸ்திரிகள் பலர் சிலவிடங்களில் இக்கனவுகளை நனவாக்கியுள்ளார்கள். இவ்வாறு நமது நாடு நகரங்களும் வீதி களும் வீடுகளும் திருத்தியமைக்கப்பெற்றாலொழிய நாம் ஆரோக்கிய திடகாத்திரர்களாக வளர்தல் சாத்தியமில்லை. நமது மக்களும் பலவித நோய்களால் துன்புற்று, அதனால் அவர் கள் இவ்வுடலினையெடுத்தகருத்து நிறை வேறாதொழியும்.

3. அவ்வாறின்றி. நமது குடும்பங்களிற்சனனமெடுக்கும் குழந்தைகள் அழகியநகர்களில் இனிமையான வீடுகளில் வளர் ந்து வருதலால் அவர்களுடைய சரீரம் பலப்பட்டு, அவர்களது மனமும் பரிசுத்தமடைந்து சார்ந்த பொருள்களின் வண் ணமாய் பண்புபெற்று நிற்கும். ஆன்மா சார்ந்த பொருள் களின் வண்ணமாய் நிற்பான் என்பது உலகறிந்த வுண்மை யன்றோ? ஜீவன் பிறந்த காலந்தொட்டு எவ்வெப் பொருள் களைப்பார்த்து எவ்வெப் பொருள்களைக் கையாள்கின்றானோ அவ்வப் பொருள்களின் மீது பற்றுதல் கொண்டு அவற்றின் தன்மையையே பெரிதும் சிந்தித்து நிற்பான். ஆதலின் அவலட்சணமான பொருள்களைப் பார்த்தலும், கர்ணகடூரமான சப்தங்களைக் கேட்டலும் பயங்கரமாகிய சம்பவங்களைக் காண் டலும் அப்பருவத்தில் குழந்தைக்கு விசேடத் தீமையை விளைவிக்கின்றது.

4. மக்கள் பிறக்குங் காலத்திற்குச் சிலகால முன்னரேயும் கெருப்பிணிகள் மேலே காட்டிய வுண்மைகளை யறிந்து, தம் வீடுகளை மனோரஞ்சிதமான திவ்ய படங்களால் அலங்கரித்

தும், செவிக்கினிய சங்கீதத்வனிகளையே தாம் கேட்டும், தம் மனத்தைச் சர்வ பூதஹிதகரமாகிய நல்லெண்ணங்களால் நிரப்பியும் வருவார்களாயின், உத்தம ஜீவர்கள் தம்மிடம் ஜனித்தற்கு யாது தடையாகும்? அவ்வாறின்றி, வீடுகள் அழுக்கடைந்து புழுதி நிறைந்து கிடத்தலும் ஒழுங்கீனமாய்ப் பண்டங்கள் ஆங்காங்கு கிடத்தலும், சண்டை சச்சரவுகள் குடும்பத்தில் அடிக்கடி நிகழ்ந்து வருதலுமாகிய இவைபோன்ற கெடுதிகள், காணப்படுமாயின் அவை தாய்மாரின் குணங்களையும் குழந்தைகளின் குணங்களையும் கெடுத்துவிடு மென்பதற்கு ஐயம் சிறிதுமில்லை. நம்மைச் சூழ்ந்துள்ள பொருள்கள் யாவும் பிரதி நிமிஷமும் நமது தன்மையை மாற்றி வருகின்றன. அவற்றால் நாம் சாதகமும் பெறலாம். பாதகமும் பெறலாம். நாம் எதனை யொழிப்பது எதனை யேற்பது என்ற வினாவை இங்கு வினவுதல் மிகவுபயோகமாகும்.

5. நாம் அகத்தூய்மை பெறுதற்கு புறத்தூய்மை ஓர் பெருந்துணையாகும். ஆயினும் அகத்தூய்மையே போதுமென்று வாதிப்பவர் சிலருளர். இவர்கள் ஸ்தூலவுலகினையும், ஸ்தூல சரீரத்தையும் ஸ்தூல வாழ்வினையும் பொருட்படுத்தார்போலும்! ஸ்தூலமும் சூட்சுமமும் எவ்வாறு இணைபிரியாது நிற்கின்றதென இவர்கள் அறியார்கள். ஆரோக்கியமான ஸ்தூல வாழ்வினுக்குச் சுத்தவாகாயம் இன்றியமையாததுபோல் ஆரோக்கியமான சூட்சுமவாழ்க்கைக்கு உத்தம மனோவாகாயம் இன்றியமையாததாகின்றது. இவ்வாறு, உள்ளும் புறமும் ஒன்றையொன்று ஒத்து, ஒன்றிற்கொன்று சகாயமாய் ஸ்தூலமும் சூட்சுமமும் நிற்பதாகின்றன. உடலில் வாழும் உயிர் மேம்பாடடைதற்கு இவை யிரண்டும் சிறிதும் முரண்பாடின்றி தத்தம் தர்மங்களைச் சீராய்ச் செய்தல் வேண்டும். ஆதலின் ஸ்தூல சூக்கும உலகங்களின் உண்மையறிவு நமக்கு எத்துணையாவசியகமாகின்றது! நம்மக்கள் நல்லாரோக்கியமும் நற்சீலமும் வாய்ந்து வாழ்வதற்கு நமது கிருகங்களும் தெருக்களும் நகர்களும் எத்துணை உதவிபுரிகின்றன! அல்லது பிரதிகூலம் செய்கின்றன!

ஆர். பஞ்சாபகேசன்.

## தைவாசுரசம்பத்து

பகவத்கீதை என்பது பகவான் ஸ்ரீமந் நாராயணனாலேயே அர்ச்சுனனுக்கு நேரில் போதிக்கப்பட்ட உபதேசம். அது ஐந்தாவது வேதம் என்று சொல்லப்படுகிற மகாபாரதத்தின் மத்தியில் வியாச மகாமுனிவரால் அமைக்கப்பெற்றது. இந்து மதஸ்தர்களால் பிரஸ்தானத்திரயங்கள் என்று கொண்டாடப்படும் மூன்று முக்கியமான கிரந்தங்களில் அது ஒன்று. அது, அத்துவைத சாஸ்திரம் என்றும் யோக சாஸ்திரம் என்றும் உபநிஷத்தென்றும் அறிஞர்கள் கூறும் பெருமை வாய்ந்தது. அநேகமாய் உலகத்தில் இப்போது வழங்கிவரும் எல்லா பாஷைகளிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒருவாறு அதைப்பற்றி கேள்விப்படாதவர்கள் இல்லை என்றே சொல்லலாகும்.

அதன் மகிமையைப்பற்றி பெரியோர்களால் எழுதப்பட்டிருக்கிற அநேக சுலோகங்களில், "பசுவின் மடியிலிருக்கும் பாலைக் கன்றுக் குட்டியை உத்தேசித்து சுரக்கும்படி செய்து இடையன் கறந்து எப்படி அபேக்ஷிக்கிற ஜனங்களுக்கு உபயோகப்படும்படி செய்கிறானோ, அப்படியே யதுகுலதிலகனான ஸ்ரீகிருஷ்ணன் எல்லா உபநிஷத்துக்களிலும் மறைந்து நிற்கும் அமிருதம் போன்ற ஸாரமான தத்துவங்களை, அர்ச்சுனனை வியாஜமாகவைத்துக் கொண்டு கீதை என்னும் அமிருதகலசத்தில் கலந்து எல்லா விவேகிகளும் உட்கொண்டு பரகதியடையும்படி வைத்திருக்கிறார்" என்பது ஒன்று.

ஆகவே புருஷர்கள் அல்லது ஸ்திரீகள் எந்த தேசத்தில் தோன்றினாலும் எந்த காலத்தில் உதித்தாலும் எந்த ஜாதியில் பிறந்தாலும் அவர்கள் விவேகிகளாக மட்டும் இருப்பார்களேயானால் பகவத் கீதையிலுள்ள உண்மைகளைக் கற்றுணர்ந்து அவைகளை அனுஸரித்து நடந்து விகாஸமடைந்து பரகதியைச் சேர உரித்தாகிறார்கள் என்பது ஏற்படுகிறது.

அந்த கீதா சாஸ்திரத்தின் 16-வது அத்தியாயத்தில் இவ்வுலகத்தில்: பிராணிகள் தேவ குணங்கள் பொருந்தியவைகள் என்றும் அசுரகுணங்கள் பொருந்தியவைகள் என்றும் இருவகையாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன; தேவ குணங்களின் கூட்டத்துக்கு தைவீஸம்பத்து என்றும் அசுரகுணங்களின் கூட்டத்துக்கு ஆசுரீ சம்பத்து என்றும் பெயர்; அவை

களில் தைவீஸம்பத்து என்பது மனிதர்களை ஏற்கெனவே கட்டுண்டிருக்கும் பந்தங்களிலிருந்து விடுவிக்க அனுகூலமாயுள்ளவை; ஆசுரீ சம்பத்து என்பது மனிதர்களை மேன்மேலும் புதுபந்தங்களுக்கு உட்படுத்தக் கூடியவை, என்று கூறப்பட்டிருக்கிறது.

தன்னுடைய முன்னேற்றத்தை விரும்புகிற ஒவ்வொருவரும் முன்னமேயுள்ள பந்தங்களிலிருந்து விலகவேண்டியதும் புது பந்தங்களுக்கு உள்ளாகாமல் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டியதும் அவசியம் ஆகையால் தைவீசம்பத்து இன்னவை என்பதை நன்று தெரிந்துகொண்டு அந்த குணங்களைநாடிப் பயிற்சிசெய்ய வேண்டியதும் ஆசுரீ சம்பத்து இனனவை என்பதை நன்ருய்த் தெரிந்துகொண்டு அந்த குணங்களை விலக்கவேண்டியதும் ஒவ்வொருவருக்கும் கடமை ஆகிறது.

ஆகையால் இப்பத்திரிகையின் பிற் பகுதிகளில் தைவீ சம்பத்து என்று சொல்லப்பட்ட தேவகுணங்களும் ஆசுரீ சம்பத்து என்று சொல்லப்பட்ட அசுரகுணங்களும் ஒவ்வொன்ருக விவரித்து எழுதப்படும்.

வி. விசுவநாதய்யர்.

---

## பத்திராதிபர் குறிப்புக்கள்

---

நம் தலைவி டாக்டர் அன்னை வஸந்தை அவர்களின் **77-ஆம் வருஷப்பிறப்புக் கொண்டாட்டம்** :—1847-ஆம் வரு அக்டோபர்மீ 1௳ அம்மையவர்கள் இவ்வுலகில் அவதரித்தார். ஆகையால் இம்மாதம் 1௳யை இவ்வுலக முழுதுமுள்ள பிரஹ்மஜ்ஞான சபையோர்கள் சிறப்பாகக் கொண்டாடினர். நம்தேசத்தில் அடையாறு, மதராஸ், சேலம், மதுரை, அனந்தபுரம், கர்நூல், பெஜவாடா, கோலாப்பூர், கோரக்பூர், மதனப்பள்ளி, திருச்சி, தஞ்சாவூர், பங்களூர், திருநெல்வேலி, சிவகங்கை, காஞ்சீபுரம் முதலிய பலவிடங்களில் ஒவ்வொருவூரிலும் ஓர் விசேஷ விமரிசையோடு அவருடைய பிறப்புத் திருவிழா, கொண்டாடப்பெற்றது.

---

**பிரஹ்மஜ்ஞான ஸபைகளின் கான்பரன்ஸ்** :—பெங்களூர், கஞ்சம், கர்நூல், மானமதுரை இவ்விடங்களில் வெகு உற்சாகத்துடன் ஸமாகமங்கள் நடந்தேறின.



**ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்** :—இதன் பிரசாரக முயற்சி பிரஹ்மஜ்ஞான ஸபாத்யக்ஷராகிய டாக்டர் அன்னை வஸந்தையவர்களால் செப்டம்பர்மீ 3௳ யன்று மதராஸ் கோக்கலே ஹாலில் ஆரம்பிக்கப்பெற்ற சமயத்தில், அம்மையவர்கள், நாமனைவரும் இம்மும்மாதப் பழக்கத்தால் எப்போதுமே சோதரபாவத்தை ஸஹஜதர்மமாக்கிக்கொண்டு, சாதி மதச்சழக்குகளை யொழித்து, தீண்டாச்சாதியார்கள், கைத்தொழிலாளிகளுள்ளும் விசேஷமாய்ப் பெண்மக்கள் இவர்கள் நிலைமையை விருத்திசெய்வதோடு, நமக்குக் கீழ்ப்படியிலுள்ள ஜீவராசிகளையும் சோதரவுணர்ச்சியோடு நடத்தல்வேண்டுமென்றும், இவைகளைப்பற்றி வெரும் பேச்சும் எழுத்தும் உதவா, ஆனால் நம் எண்ணமே கீழான பிராணிவர்க்கங்களுள்ளிட்ட உலகமுழுதும் பரவுமென்றும் அதனாலேயே நாம் ஒழுக்கத்தில் நிலைபெறலாமென்றும் சுருங்க வற்புறுத்திக்கூறினர். அன்று ஸர். தி. சதாசிவஐயர், ஸ்ரீமான் அருண்டேல், மிருகக்ஷேம பரிபாலனசங்கக் காரியதரிசியாகிய ஸ்ரீமான் யன். வி. ரங்கஸ்வாமி ஐயங்கார், ஸர்வதேச ஐக்கியஸங்க மெம்பராகிய மிஸ்ஸஸ் கானன் இவர்கள் சோதரபாவத்தின் வெவ்வேறு அம்சங்களை அழகாய் விவரித்தனர். நவம்பர்மீ முதல் தேதியும், டிஸம்பர் முதல் தேதியும் இதேமாதிரியான ஏற்பாடுகள் கோக்கலேஹாலில் நடக்கும். இவ்வாறே குண்டூர், பெஜவாடா, ராஜமஹேந்திரபுரம், காக்கிநடா, விசாகபட்டணம், பங்களூர், திருவனந்தபுரம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி முதலிய ஊர்களிலும் உபந்யாஸங்களாலும் துண்டுப்பத்திரங்களாலும், நிழற்படக் காட்சிகளாலும் "சகோதரபாவத்தைப்" பரவச்செய்கின்றனர். பூனாவில் ஹிந்து, பார்ஸீ, முகம்மதீய, கிறிஸ்தவமதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் பிரதிநிதி முன்வந்து ஸஹோதரபாவத்தைப்பற்றி நன்கு விரித்துரைத்தனர். உலகெலாம் நலமோங்குக.

---

**ராய் பஹதூர் பூர்ணேந்து நாராயண ஸிம்ஹா** :—இந்திய பிரஹ்மஜ்ஞானக் கிளைச்சபைகளுக்கெல்லாம் தலைநகராகிய காசியில் பொதுக்காரியதரிசியாக வேலைபார்த்துவந்த இப்பெரியவர் இப்போது காலஞ்சென்ருர் என்பதைக் கேட்க அனேகருக்கு வருத்தமுண்டாகுமென்பதில் ஐயமில்லை. மேற்கூறிய பிரசாரக முயற்சிகளைப் பெரும்போக்கில் நடத்த அவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தை இவ்வளவு அவ்வளவல்ல. எனினும் மஹான்களுடைய சங்கற்பத்தை யாவரே அறிவர்!

210793

## 'தியசாபிகல் சொசைட்டி' என்னும் பிரம்மஞ்ஞான சபை.

---

இது 1875௵ நவம்பர்௴ 17௳ அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கு நகரில் ஏற்பட்டுச் சென்னை அடையாற்றில் நிலைபெற்றிருக்கிறது. சமரசபுத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருவோர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து ஆஸ்திகபுத்தியை வளர்த்து மனிதவர்க்கத்திற்கு ஞான வழியில் உபகரிப்பவர்கள் ஆவர். இதன் முக்கியகொள்கைகள் மூன்று :—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப்பதங்களின்றி ஸர்வஜன சோதரபாவம் உலகில் நிலைபெறச்
ாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவசாஸ்திரம் பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத்தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவராத பிரபஞ்சநியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

பிரம்மஞ்ஞான சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தாராகவும்
ருக்கலாம் அல்லது ஒரு மதத்தையும் அங்கீகரிக்காத
ராகவும் இருக்கலாம். ஆனால் மேற்படி நோக்கங்களை
ப்புக்கொண்டும், மத துவேஷங்களை ஒழித்து நல்லெண்ண
ள்ளவர்களாயிருந்து கொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள்
ப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்துகொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமல்ல ; தத்துவத்தைக் கண்டறியும் ஒரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பது தான் காரணம்.

பரிசுத்த வாழ்வினாலும் உயர்லக்ஷியங்களைச் சிரத்தையாய்ப் பின்பற்றுவதாலுமே தத்துவத்தைத்தெரிந்து கொள்ளலாம் என்பது அவர்கள் சித்தாந்தம். தத்துவமானது வருந்தித்தேடி

முயற்சியால் பெறும் பரிசாகுமேயன்றிப் பிறரை பலவந்தப்படுத்தி ஒப்புக்கொள்ளச் செய்வது ஆகாது. ஒவ்வொருவரும் தத்தம் படிப்பினாலோ உள்ளுணர்வாலோ விஷயங்களைத் தெரிந்து கொண்ட பிறகு நம்பவேண்டுமே யன்றி, பிரமாணமெனக் கேட்டமாத்திரத்தில் நம்பலாகாது. துவேஷிகளிடத்திலும் பொறுமையாயிருத்தல் தங்கள் கடமையென அவர்கள் தெரிந்து செய்கிறார்கள். அறிவீனர்களுக்கு அவர்கள் போதிப்பார்களே யொழிய அவர்களைத் தண்டிக்கார்கள். ஒவ்வொருமதமும் பிரஹ்ம ஞானத்தின் ஓர் தோற்றமே என்பதை யவர்கள் அறிந்து கொண்டவர்களாகையால் அதைத் தூஷிப்பதைவிட்டுப் படிப்பதே மேலெனக் கொள்கிறார்கள். அதற்குப் பிறரைச் சேர்க்க முயலுவதை விட்டு அதன் கருத்துக்களை எவரும் அப்பியசித்தால் போதும் என்றெண்ணுகிறார்கள். **ஸத்தியமே** அவர்கள் இலக்ஷியம். **சாந்தியே** அவர்களுடைய ஞாபகமொழி.

பிரஹ்மஞானமென்பது எல்லா மதங்களுக்கும் ஆதாரமான உண்மைகள் அடங்கியதாகும். அதை எம்மதமும் தனக்கே உரித்தெனக் கொள்ளுதல் முடியாது. அதன் தத்துவசாஸ்திரமுறையால் உலகவாழ்க்கை நமக்கு நன்கு தெளிவாகிறது. இவ்வுலகத்தின் விகாஸமுறையை நடத்திவரும் அன்பும் நடுநிலைமையும் இத்தன்மையன வென்று நிரூபணமாகின்றன. ஓய்வு ஒழிதல் இல்லாத ஜீவயாத்திரையில், மரணமானது அடிக்கடி நேரும் சாதாரண சம்பவம். அதன் பிறகு ஜீவன் இன்னும் பூர்ணமும் பிரகாசமுமான வாழ்வெய்துகிறான். ஆத்துமாவே மனிதன், மனமும் மெய்யும் அவன் கருவிகள். இவ்வுண்மைகளை மனிதனுக்குணர்த்தி அதனால் ஆத்தும வித்தையை உலகில் தழைக்கச்செய்கிறது. மதக் கொள்கைகளுக்கு இரகசியார்த்தங்களை விளக்கி மதக்கிரந்தங்களைத் தெளிவுறச் செய்வதனால் மனிதர் தம் உள்ளுணர்வால் உண்மையெனத் தெரிந்து கொண்டவைகளை விவேகத்திற்கிணங்கவும் ருசுப்படுத்துகிறது பிரஹ்மஞ்ஞானம்.

பிரம்மஞ்ஞான சபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படிக்கிறார்கள். பிரம்மஞ்ஞானிகள் இவற்றை யநுஷ்டிக்கிறார்கள். படிக்கவும், பொறுமை பாராட்டவும், உயர்லக்ஷியங்களுக்காக் இடைவிடாமல் முயலவும் சித்தமுடையவர் எவரும் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். பிரம்மஞ்ஞானியாதல் அவ்வவ்வங்கத்தினரின் முயற்சியைப் பொருத்தது.

PRINTED AT THE BESANT PRESS, MADRAS.